[illegible]

V 6 NO 47 30 NOV 1933.

3L

M211, M28 KH

M33.6.47

189171

KALANILAYAM

தனிப்பிரதி விலை அணா 0-2-6.

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

உள் நாடு—வருஷ சந்தா ரூ. 7 0 0
6 மாதம் ரூ. 3 12 0
புற நாடு—வருஷ சந்தா ரூ. 9 0 .0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம் சென்னை.

Vol 6.] 1933 ஹு நவம்பர் மீ 30௳ [No. 47

OFFICE OF THE REGISTRAR OF ...
23 MAY 1934

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 837
2. தமிழ்ப் பாடம்
அஷ்ட பிரபந்தம்—திருவரங்கக் கலம்பகம் 839
3. ஞான தீபம்
T. R. இராஜகோபால் 841
4. அப்பர் (64 கலை-வியாகரணம்-சந்த விருத்தம்)
E. N. தணிகாசல முதலியார், B.A.B.L. 841
5. நம்மாழ்வார் வைபவம் (6-ம் பத்து, 2-ம் தசகம்)
K. இராஜகோபாலாச்சாரியார் B.A.B.L. 843
6. யாப்பிலக்கணம்—(வண்ணம்)
வித்துவான், M. V. வேணுகோபாலப் பிள்ளை 845
7. கம்பராமாயணம் (கவந்தப் படலம்)
T. N. சேஷாசலம், B.A.B.L. 846
8. காற்றுமழை (ஆராய்ச்சி)
Shakespeare's Tempest 848
9. பழமுதிர் சோலை - கற்பகக்கனி—"சபரி" 851
10. வர்த்தமானம் 852

க லா நி ல ய ம்

18912

ஏழைச் செல்வம் 2.

முன்னைய இதழில், எடுத்தெழுதப்பெற்ற எட்வர்ட் கார்ப்பெண்டர்தம் மொழிகள் ஊன்றிச் சாலக் கருதற்குரியன. வாழ்க்கையின் பழைய நோக்கமெல்லாம் பாழாக இப்பொழுது வஞ்சகமே வழக்கமாகி விட்டதென்று அவர் பரிவுடன் கூறும் மொழிகளைக் கருத்துட்கொண்டு அவ் வஞ்சனையினின்று வழிவிலகிச் செல்லும்வகை உரைப்பவர் எவரேனும் உளராயின் அவர்மொழியை நனிபோற்றி அவ்வொரு நெறியைப் பின்பற்றி ஒழுகலோ, மற்று, பொருளாதாரச் சாத்திரங்களையும் முன்னேற்றக் கொள்கைகளையும் நாம் அவமேகட்டித்தழுவிக் கொண்டாடித்திரிவதோ கடன்! ஏழைகளைப் பாழாக்கிச் செல்வத்தையும் சீரழிக்கும் இவ்வஞ்சனையேமலிந்த வாழ்க்கை வேண்டா என்று உள்ளங்கசிந்து உரைப்பாரைப் பகற்கனாப் பேதையர் எனப் புறத்தேதள்ளி, தினசரி வாழ்க்கைத் திட்டத்தைத் திருத்தி உயர்த்தலே வேண்டப்படும் என்று, வஞ்சனைக்கு விலைவைத்துப் பகர்வோர்தம் வாய்பார்த்திருப்பதற்கே மனிதர் கூவப்படுவாராயின் பகையெனும் பேய்கள் எத்தனை வகைகள் உளவோ அத்தனையும் ஒருங்கே மக்களைப் பிய்த்துத் தின்னும்படி ஏவிய தீமையே எஞ்சாமல் என் செய்யும்?

மனித வாழ்க்கையைத் தழுவிக்கொண்டிருக்கின்ற இவ்வஞ்சனையால் விளையும் பயன் எத்திறத்தும் ஏழ்மையே. செல்வமுடையோர் சிலர் எங்கும் இருக்கலாம்; எனினும் அவர்களிற் சுகமடைந்தவன் எவனேனும் உளனாயின், "நன்று, அவன் விலாசத்தை எனக்குத் தெரிவி" என்று தாமஸ் கார்லைல் கேட்கின்றார். வாழ்க்கையை வஞ்சகத்திற்கு விற்றுவிட்டுச் செல்வத்தை வாங்கினாரெனின், பின் அச் செல்வத்தைக் கொண்டு எதனை வாழ்வது? ஏழைகளின் சோற்றைப் பிடுங்கிச் சிலர் பெரியபெரிய மாளிகைகள் கட்டலாம்; எனினும் அம் மாளிகைகளுள் நடமாடுவதெல்லாம் நல்வாழ்வு இழந்த ஏழ்மையே. வீட்டின் அளவையும் உடுக்கும் பட்டையும் ஓட்டும் வண்டியையும் வேலையாட்களின் கூட்டத்தையுங் கொண்டு ஒருவனைப் "பெரிய மனிதன்" என்று அழைக்கப்பயின்றிருக்கின்றோம். இவன் சில தருமங்களையும் செய்துவிடுவானாயின் நிரம்பப் பெரிய மனிதன். உள்ளத்தின்கண் உயரிய நோக்கம் ஒன்றுமின்றி இந்தப் பெரியமனிதத்தனத்தை எய்துவதற்கே முயல்வாராயின் பின் மனிதவாழ்க்கை என்னவாகும் என்பதை எட்வர்ட் கார்ப்பெண்டர் பின்வருமாறு காட்டுகின்றார்:—

If this state of affairs were to go on long England would be converted into one vast workhouse and pauper asylum, in which rows of polite paupers, surrounded by luxuries and daintily fed, would be entirely served and supported by another class—of paupers unable to get bread enough to eat !

But the whole gentility business is corrupt throughout, and will not bear looking into for a moment. It is incompatible with Christianity (at least as Christ appears to have taught it) ; it gives a constant lie to the doctrine of human brotherhood.

செல்வமில்லா ஏழைகளைச் உண்டாக்குவதுமன்றி ஏழ்மையுடைய செல்வர்களையே செய்து அமைக்கும்

இவ்வஞ்சக வாழ்க்கை என்று அழுங்குகின்றார் கார்ப்பெண்டர். இவ்வகைப் "பெரியமனிதன்" நிலைமையும் நிகழ்ச்சியும் மிகவும் வெறுத்தற்குரியன. கூறுகின்றார் அவர்:—

He finds himself among people whose constipated manners and frozen speech are a continual denial of all natural affection and a warning against offence; where human dignity is at such a low ebb that to have an obvious patch upon your coat would be considered fatal to it; where manners have reached the very lowest pitch of littleness and *niaiserie*; where human wants and the sacred facts on which human life is founded, are systematically ignored, where it is assumed as a matter of course you do nothing for yourself—to lighten the burden which your presence in the world necessarily casts upon others; where all dirty work, or at least such work as is considered dirty by the "educated" people in a household, is thrust upon young and ignorant girls; where children are brought up to feel far more shame at any little breach of social decorum than at glaring acts of selfishness and uncharitableness.

தயவின்றிச் சுயநயத்தால் செய்கின்ற எத்தனையோ பல புல்லிய செய்கைகள் "பெரியமனிதத்தனத்தை"ச் சிறிதேனும் குறைக்காமலிருக்க, இடம்பத்தின் குறைவினை அதற்குக் குறைவாக மதிக்கின்ற வாழ்க்கையின் பொய்மையைக்கருதிச் சோர்கின்றார் கார்ப்பெண்டர்.

In short, the unfortunate man finds himself in a net of falsehoods; the whole system of life around him is founded on falsehood. The pure beautiful relation of humanity, the most sacred thing in all this world, is betrayed at every step; and Christianity with its message of human love, Democracy with its magnificient conception of inward and sacramental human equality, can only be cherished by him in the hidden intereior of his being; they can have no real abiding place in his outward life.

இனி, இந்தப் பெரியமனிதத்தனத்தைக் காத்துக் கொள்வதற்குப் பணம் மிக வேண்டும். அந்தப் பணம் எவ்வகையில் வருகின்றதென்பதைக்கருதுங்கால் பின்னும் இரக்கமே பெருகவேண்டுமென்று அவர் எடுத்துக்காட்டும் செய்திகள் சில சிந்தித்தற் குரியன:—

And when he turns to the sources from which his living is gained, he only flounders from the quagmire into the bog. The curse of dishonesty is upon him; he can find no bottom anywhere.

The interest of his money comes to him he knows not whence; it is wrung from the labor of someone—he knows not whom. His capital is in the hands of railway companies, and his dividends are gained in due season—but how? He dares not inquire. What have companies, what have directors and secretaries and managers to do with the question whether *justice* is done to the workmen? and when did a shareholder ever rise up and contend that dividends ought to be less and wages more? (There have been one or two cases lately, but they were hissed down.)

His rents come to him from land and houses. Shall he go round and collect them himself? No, that is impossible. This farmer would show him such a desperate balance-sheet, that widow would plead such a piteous tale, this house might be in too disgraceful a state, and entail untold repairs. No, it is impossible. He must employ an agent or steward, and go and live at Paris or Brighton out of sight and hearing of those whose misfortunes might disturb his peace of mind;—or put his money affairs entirely in the hands of a solicitor. *That* is a good way to stifle conscience.

Money entails duties. How shall we get the money and forget the duties? Voila the great problem! . . . But we cannot forget the duties. They cark unseen.

He has lent out his money on mortgage. Horrid word that "mortgage!"—"foreclosure," too!—sounds like clutching somebody by the throat! Best not go and see the party who is mortgaged;—might be some sad tale come out. Do it through a solicitor, too, and it will be all right.

Thus the unfortunate man of whom I have spoken finds that, turn where he may, the whole of his life—his external life—rests on falsehood. And I would ask you, reader, especially well-to-do and dividend-drawing reader, *is* this—this picture of the ordinary life of English gentility—your Ideal of life? or is it not? For if it is do not be afraid, but please look it straight in the face and understand exactly what it means; but if it is not, then come out of it! It may take you years to *get* out; certainly you will not shake yourself free in a week, or a month, or many months, but still—Come out!

கைப்பொருள் வைத்திருந்து காலம் கழிப்பவர்தம் தன்மையைப்பற்றி எட்வர்ட் கார்ப்பெண்டர் உரைத்திருக்கும் இது,பல்வகை உத்தியோகங்களாலும், வர்த்தகத்திலும், சட்டம் வைத்தியம் முதலிய தொழில்களிலும், பெரியமனிதர்களாய் நடமாடுகின்றவர்களுக்கும் ஒக்கும். அன்பையும் அருளையும் மறுத்த பொய்ம்மையா லன்றி இந்த வாழ்க்கைத்திட்டத்தை உயர்த்த லியலாது. இந்தச் செய்தியை மறைப்பதால் நன்மை இல்லை; எடுத்துச் சொல்லி ஏற்றுக்கொள்வதே நலம்.எனினும்,இவ்வகை வாழ்க்கையில் ஈடுபட்டிருப்பவரைப்பற்றி நாமொன்றும் வன்மங் கொள்ளவேண்டா. அன்னவர்களும் நம் சகோதரர்களே. தெரிந்தோ தெரியாமலோ அவர்களுமே இப்பொய்யின் வலையில் அகப்பட்டு வருந்துகிறார்க ளாதலின், இரங்குதற்கே உரியவர்கள். இல்லையேல் இப் பெரியமனித இனத்தினர் உலகடங்கலும் சலித்துச் சோர்ந்து, உயிர்வைத்திருப்பதற்கு ஓர் பொருள் காணமாட்டாமல், களப்பிற்கும் வீட்டிற்கும் காட்சிச்சாலைகளுக்கும் இடையே ஏன் திரிந்துகொண்டிருக்கின்றனர்? வாழ்க்கையில் ஊக்கமும் சுவையும் இழந்ததாலன்றோ, இன்னவாறு அலையத் தலைப்படுகின்றனர்.மானுட இதயத்திற்கு இயற்கையாய வோர் பெருமையுளது; ஆதலின், பொய்யையே புசித்து வாழ மறுக்கின்றது. இதனால், துன்பமே சூழ்கின்றது;இதனின்று தப்பவேறு எதனையோ தேடுகின்றனர்;அது என்னதுஎன்பது தான், பாவம், அவர்களுக்குத் தெளிவுறத் தெரிந்ததில்லை. வாழ்க்கைச்செல்வத்தை நினைக்காமல் செல்வவாழ்க்கையைத் தேடுவதால் கைகண்ட கேடாம் இது.

ஏழைச் செல்வம் இதனின்று தப்பி வாழ்க்கையே செல்வமாகக் கொண்டு மனிதர் அமைவதற்குக் கலைகளன்றிக் கைதந் துதவவல்லது ஒன்றுமில்லை என்பதை இதயமுற உணர்த்தமுயல்கின்றது இக் கலாநிலயம். வாழ்க்கைத்திட்டத்தை உயர்த்த வேண்டுமென்பதை விட்டு வாழ்க்கையே உயரும்வகை நாடலே நன்மை.

தமிழ்ப்பாடம் 97.

அஷ்ட பிரபந்தம்—திருவரங்கக் கலம்பகம்

[830-வது பக்கத் தொடர்ச்சி]

காலா யிரமுடி யாயிர மாயிரங் கைபரப்பி
மேலா யிரந்தலை நாகங் கவிப்பவிண் பூத்தகஞ்சம்
போலா யிரங்கண் வளரும் பிரான்பொன் னரங்க
[னென்றே
மாலா யிரங்கவல் லார்க்கெய்த லாந்திரு வைகுந்தமே.

பதப்பிரிவு:—கால் ஆயிரம் முடி ஆயிரம் ஆயிரம் கை பரப்பி மேல் ஆயிரம் தலை நாகம் கவிப்ப விண் பூத்த கஞ்சம் போல் ஆயிரம் கண்வளரும் பிரான் பொன் அரங்கன் என்றுஏ மால் ஆய் இரங்க வல்லார்க்கு எய்தல் ஆம் திரு வைகுந்தம்ஏ.

பதவுரை.

கால் - கால்கள், ஆயிரம் - ஆயிரமும், முடி - சிரங்கள், ஆயிரம் - ஆயிரமும், ஆயிரம் - ஆயிரம், கை - கைகளும், பரப்பி - பரப்பிக்கொண்டு; மேல் - மேலே, ஆயிரம் - ஆயிரம், தலை-தலைகளை உடைய, நாகம் - ஆதிசேஷன், கவிப்ப - கவிந்திருக்க; விண் - ஆகாயத்தில், பூத்த - மலர்ந்த, கஞ்சம்போல - தாமரை மலர்களைப்போல், ஆயிரம் - ஆயிரம், கண்வளரும்-கண்கள் துயிலப்பெறுகின்ற, பிரான்-பரம்பொருள் தான், பொன் - அழகிய, அரங்கன் - திருவரங்கத்தில் எழுந்தருளி இருப்பவன்,என்றே-என்று நிச்சயமாக உணர்ந்து, மால் ஆய் - பக்தி உடையவர்களாகி இரங்க - மனம் உருக, வல்லார்க்கு - கூடியவர்களுக்கு, திரு வைகுந்தம் - சிறந்த வைகுண்டத்தை, எய்தல் ஆம் - எளிதில் அடையக்கூடும்.

கருத்து:—ஆயிரம் என்பது இங்கு அளவில்லாமையைக் குறித்து நிற்கின்றது. கணக்கிலாக் கால்களும், சிரங்களும், கைகளும், கண்களும்உடையராய்எங்கும் வியாபித்திருக்கின்ற எம்பெருமான் எல்லாமறியவும், எல்லாஞ் செய்யவும் வல்லவர் என்னும் இப்பாசுரம், ஸஹஸ்ர சீருஷா புரிஷ: ஸஹஸ்ராக்ஷ ஸஹஸ்ர பாத்" என்ற புருஷஸூக்தத்தின் முதலையே தழுவிப் பாடப்பெற்றிருக்கின்றது.அந்தப்பரம்பொருள்தான் இந்தத் திருவரங்கநாதனும் என்ற பக்தியோடு மனமுருகித் தொழுபவர் வைகுந்தம் பெறுவது திண்ணமெனக் கவி சாற்றுகின்றார்.

குறிப்பு:—திருமாலினது கண்கள் விண் பூத்த கஞ்சம்போல் இருந்தனவென்பது இல்பொருள் உவமை அணி. ஆகாயத்தில் தாமரை ஒருபோதும் பூக்காது. ஆதலின், ஆகாயத்தில் பூத்த தாமரை என்பது இல்லாத பொருளாம். என்றாலும், ஆகாயத்தில் தாமரை பூக்குமாயின் எவ்வாறு தோன்றுமோ, அவ்வாறு தோன்றின, நீலநிற மேனியனான திருமாலினது தாமரைபோன்ற கண்கள் என்றுகொள்ளவேண்டும். ஆகையால் இது இல்பொருள் உவமைஆகின்றது. இதுவே போல்,இக்கலம்பகத்தின் முதற்பாட்டில், "கரிய மால் வரை முளரிக்காடு ஈன்று கிடந்தாங்கு" என்று வந்திருப்பதும் இல்பொருள் உவமையே. மலையினும் தாமரை பூத்தலென்பது இல்லை.

என்று + ஏ = என்றே எனவும், வல்லார்க்கு + எய்தலாம் = வல்லார்க் கெய்தலாம் எனவும், நிலைமொழியீற்றுக் குற்றியலுகரம் கெட்டுப்போய்விட, அது நின்றிருந்த மெய்யின்மேல் வருமொழி முதல் உயிர் ஏறிப் புணர்ந்தது.

இச்செய்யுள், திருவரங்கத்தந்தாதி, திருவரங்க மாலைச் செய்யுள்கள்போல் கட்டளைக்கலித்துறை. மெய்யெழுத்துக்களை விட்டுவிட்டு எண்ணினால் ஒவ்வோரடியிலும் பதினாறு எழுத்துக்கள் இருக்கும்.

வைகலந்த மூவிலைவே லீசற்கும் வாசவற்கும்
வாசப் பூமேல்
மெய்கலந்த நால்வேத விரிஞ்சனுக்கும் மேலாவீற்
றிருப்பர் மாதோ
பைகலந்த பாம்பணைமேற் றிருவரங்கப் பெருநகருட்
பள்ளி கொள்ளும்
கைகலந்த நேமியான் றிருநாமத் தொருநாமங்
கற்றார் தாமே. 3

பதப்பிரிவு:—வை கலந்த மூ இலை வேல் ஈசற்கும் வாசவற்கும் வாசம் பூ மேல் மெய் கலந்த நால் வேதம் விரிஞ்சனுக்கும் மேல் ஆ வீற்றிருப்பர்மாதோ பை கலந்த பாம்பு அணைமேல் திரு அரங்கம் பெரு நகர் உள் பள்ளி கொள்ளும் கை கலந்த நேமியான் திரு நாமத்து ஒரு நாமம் கற்றார் தாமே.

அன்வயம்:—திருவரங்கப் பெருநகருள் பைகலந்த பாம்பணைமேல் பள்ளிகொள்ளும் கைகலந்த நேமியான் திருநாமத்து ஒரு நாமம் கற்றார்தாம்—வைகலந்த மூ இலைவேல் ஈசனுக்கும் வாசவனுக்கும் வாசம் பூ மேல் மெய்கலந்த நால்வேத விரிஞ்சனுக்கும் மேல் ஆய் வீற்றிருப்பார்.

பதவுரை

திரு - அழகி, அரங்கம் - அரங்கமென்னும், பெரு - பெரிய,நகர்உள் - நகரத்தினுள்,பாம்பு - ஆதிசேஷனாகிய, அணைமேல் - படுக்கையின்மேல், பள்ளிகொள்ளும் - படுத்திருக்கும், கை - கையில், கலந்த - பொருந்திய, நேமியான் - சக்கிராயுதத்தை உடைய திருமாலினது,திரு-மேன்மை பொருந்திய, நாமத்து- (ஆயிரம்) நாமங்களில், ஒரு - ஒரு, நாமம் - பேரை, கற்றார் - அதற்குரிய மகிமையை உணர்ந்து உரைக்கக் கற்றவர்—

வை - கூர்மை, கலந்த-சேர்ந்த, மூ-மூன்று, இலை-இலைகளையுடைய, வேல் - சூலத்தைஏந்திய, ஈசற்கும்-பரமசிவனுக்கும், வாசவற்கும் - இந்திரனுக்கும், வாசம் - வாசனை பொருந்திய, பூமேல் - தாமரை மலரின்மேல் இருக்கும், நால் - நான்கு, வேதம் - வேதங்

களைத்தந்த, விரிஞ்சனுக்கும் - பிரம்மனுக்கும், மேல் ஆ-மேலானபதவியில், வீற்றிருப்பர் - பெருமையோடு அமர்ந்திருப்பார். (மாதோ-அசை)

கொண்டல்கா ளும்மைக் குறித்தே தொழுகின்றே
னண்டர்கா ணாவரங்கத் தம்மானைக்—கண்டு [லிப்
மனத்துளவத் தைப்படுமென் மையலெல்லாஞ்சொல்
புனத்துளவத் தைக்கொணரீர் போய்.

பதப்பிரிவு:—கொண்டல்காள் உம்மை குறித்துஏ தொழுகின்றேன் அண்டர்காணா அரங்கத்து அம்மானை கண்டு மனத்துள் அவத்தை படும் என் மையல்எல்லாம் சொல்லி புனம் துளவத்தை கொணரீர் போய்.

பதவுரை

கொண்டல்காள் - மேகங்களே, உம்மை-உங்களை, குறித்து ஏ - நோக்கியே, தொழுகின்றேன்-வணங்குகின்றேன்,

அண்டர் - தேவர்களாலும், காணா - காண இயலாத, அரங்கத்து - திரு அரங்கத்தில் உள்ள, அம்மானை - என் தலைவனை, போய்-நீங்கள்போய், கண்டு-பார்த்து,

மனத்துள் - மனத்துள், அவத்தைப்படும் - வருந்துகின்ற, என் - எனது, மையல் - ஆசைநோய், எல்லாம் - எல்லாம், சொல்லி - அவனிடம் சொல்லி, புனம் - வனத்தில் வளர்கின்ற, துளவத்தை - துளசியை, கொணரீர் - அவனிடமிருந்து வாங்கிக்கொண்டு வாருங்கள்.

கருத்து:—கவி இங்குத்தன்னை ஒருபெண்ணாகவும், திருவரங்கனைத் தன்காதலனாகவும்பாவித்து, அவனைப் பிரிந்திருப்பதால் தான் படுகின்றதுன்பத்தை அவனிடம் சொல்லி அவனைத் தன்பால் அடைவிக்குமாறு மேகத்தைத் தொழுது தூதுவிடுவதாகக் கூறுகின்றார்.

விரிவுரை:—பக்தியால் பரவசமாகிய கவிஞர் இவ்விதம் தம்மை நயாகியாகவும் கடவுளை நாயகனாகவும் பாவித்து அகப்பொருள்துறைகளை யமைத்துப் பாடுவது மரபு என்று முன்னரே காட்டியிருக்கின்றோம். சிற்றின்ப வாசகங்கள்போல் தோன்றினாலும் இவைகளில் பக்திபரமாய உள்ளுறை அர்த்தமும் அடங்கியிருக்கும். பிள்ளைபெருமாள் ஐயங்கார், பக்தர்களை நோக்கித் "திருமால் வந்து என்னை ஆட்கொள்ளுமாறு செய்யுங்கள்" என்று வேண்டிக்கொள்ளும் குறிப்பினது இச்செய்யுள்.

தேவர்களாலும் காண இயலாத அம்மானை இம் மேகங்கள் எவ்வாறு காணக்கூடுமென்று எண்ணினார் இவர்? நிறத்தாலும், உலகத்தைக் காக்கின்ற தொழிலாலும் மேகங்கள் திருமாலை ஒக்கும். மேகம்தன்னிலிருந்து நீரை எடுத்துக்கொடுக்கின்றது என்றாகாமல் தன்னையேகொடுத்துக் காப்பதால், "தன்னையே தமர்க்கு நல்கும்" தனிப்பெருங் கருணைவள்ளலை அவை முற்றிலும் ஒத்திருக்கின்றன. ஆதலின், திருமாலும் மேகங்களும் ஒரே இனத்தைச் சேர்ந்தவர். எனவே, தேவருக்குத் தென்படாத எம்பெருமான் தன்னினத்தைச் சேர்ந்த மேகத்திற்குத் தென்படலாம் என்று கருதினர் போலும் கவி.

குறிப்பு:—நளவெண்பா, திருவேங்கடமாலை முதலிய நூல்களில் வந்துள செய்யுள்களைப்போல், இச்செய்யுளும் நேரிசை வெண்பாவாகும். மனத்துளவத்தை, புனத்துளவத்தை எனப் பின்னிரண்டடிகளில் வந்திருப்பன (திருவேங்கடமாலையில் போல்) வேறு வேறு பிரிந்து பொருள்படுமாகையால் திரிபு என்னும் சொல்லணி. முதலெழுத்து மாத்திரம் வேறாக இருக்க மற்ற எழுத்துக்கள் ஒன்றாக இருந்தால் திரிபு—முதலெழுத்தும் (திருவரங்கத் தந்தாயிற்போல்) ஒன்றாக இருந்தால், யமகம்.

காயிலை தின்றுங் கானி லுறைந்துங் கதிதேடித்
தீயிடை நின்றும் பூவலம் வந்துந் திரிவீர்கா
டாயினு மன்பன் பூமக ணன்பன் றடநாகப்
பாயன் முகுந்தன் கோயி லரங்கம் பணிவீரே. 5.

பதப்பிரிவு:—காய் இலை தின்றும் கானில் உறைந்தும் கதி தேடி தீ இடை நின்றும் பூ வலம் வந்தும் திரிவீர்காள் தாயினும் அன்பன் பூமகள் நண்பன் தட நாகம் பாயல் முகுந்தன் கோயில் அரங்கம் பணிவீர் ஏ.

பதவுரை

காய் - காயையும், இலை - இலையையும், தின்றும் - தின்றும்; கானில் - காட்டில், உறைந்தும் - வசித்தும்; தீ - நெருப்பின், இடை - மத்தியில், நின்றும் - நின்றும்; பூ - பூமியை, வலம்வந்தும்-சுற்றிவந்தும்: கதி-நற்கதி, தேடி - தேடி, திரிவீர்காள் - அலைகின்றவர்களே, (நீங்கள் இவ்விதம் தவம் யோகம் முதலியவைகளால் உங்களை ஒன்றும் வருத்திக்கொள்ள வேண்டா)

தாயினும் - தாயைக்காட்டிலும், அன்பன் - அன்புடையவனும், பூமகள் - இலக்குமி பூமிதேவி என்னும் இருவருக்கும் நாயகனும், தட - பெரிய, நாகம்-ஆதிசேஷனை, பாயல் - படுக்கையாக உடையவனும் ஆகிய, முகுந்தன் - எம்பெருமான் தங்கியுள்ள, கோயில் - கோயிலாகிய, அரங்கம் - திருவரங்கத்தை, பணிவீர்- வணங்குங்கள்! (அதுவே போதும்; நற்கதி அடைவீர்)

குறிப்பு:—பூ மகள், என்பதில் முதலிலுள்ள பூ என்னும் சொல்லை மலர் என்ற பொருளுடை தமிழ் மொழியாகக் கொண்டால், அத்தொடர் தாமரையைத் தவிசாகவுடைய இலக்குமியைக்குறிக்கும். அவ்வாறன்றிப் பூ என்பதைப் பூமிஎன்றபொருளுடைய வடமொழியாகக் கொண்டால், அத்தொடர் பூமிதேவியைக் குறிக்கும். திருமகள் நிலமகள் ஆகிய இருவருக்கும்திருவரங்கன் நாயகன் என்பதை,'பூமகள்நண்பன்'என்ற ஒரேவாக்கியத்தால்இருபொருள் படுமாறு உரைத்தது, இரட்டுற மொழிதல் என்னும் உத்தி.

ஏமாங்கதத் திளவரசன்

ஸ்ரீமான் T. N. சேஷாசல ஐயர் B.A., B.L.,

எழுதியவோர்

செந்தமிழ்க்காதை.

கலாநிலயம், வேளாளர் வீதி, புரசைபாக்கம், சென்னை. விலை ரூ. 1—4—0

ஞான தீபம்

[828-வது பக்கத் தொடர்ச்சி]

நித்திய நிரந்தரப் பூங்காவனமாகிய பிரபஞ்சத்தில், ஓயாமல் விநோத லீலைகள் பல புரியும் நித்ய நிரந்தரப் பாலனும் ஜகதீசன்.

பிரகிருதியையும் மானுடனையும் ஈசன் நோக்கி அருளலும், தன் சித்தத்தை மானுடன் ஈசன்பால் செலுத்தி இரத்தலும், பிரகிருதியுடன் கலந்து இயங்கி விவேகம் பெறுதலும், பிரகிருதியும் ஈசனை நோக்கி உயர்தலும் இயல்பேயாம். அந்த மனம் தங்களுக்கு உள்ள இயைபையும் குணாதிசயங்களையும் அவ்விஷயங்களையும் உணர்த்துவது ஆகும்.

தன்னறிவுபெற்று ஜகதீசனுடன் ஒன்றுதற்காகவே தான் பிரகிருதியானது மனிதர்க்குப் பலவிதங்களில் உதவி புரிகின்றது.

பரிபூர்ண வஸ்துவே பிரபஞ்சமாகத் தோன்றிப் பரவி இயங்கி மானுடனாக உயர்ந்து, இறுதியில் யாவற்றையும் தன்னுள் ஒடுக்கிக்கொள்கின்ற தென்பதைச் சிலர் ஐயுற்றுத் தம் புல்லறிவினால் கிரஹித்தற்கியலாது மயங்கி மறுக்கின்றனர். இவ்வாறு மயங்கி மறுத்து உழன்றபோதிலும், மீட்டு மீட்டும் அதனையே தேடி அடைந்து உய்யப் படாதபாடுபட்டு வருகின்றனர்!

தன்னறிவின்மையால் பரமாத்மாவைப் பிரகிருதி அறிகிறதில்லை; மானுடனாகத் திரண்டு உயர்ந்து தன்னறிவு பெற்றவுடன் ஞானசூரியனெனத் தெளிகின்றது. இதுபோல், மனிதன் அகவிரிவின்மையல் பிரகிருதியின் அந்தரங்கப் போக்கையும் முடிபையும் உறுதியுடன் உணர்வதில்லை; புன்மைகளும் மலங்களும் நீங்கி அகம் விரிந்து ஆன்மஒளி பிரகாசிக்கவே, பிரகிருதியானது ஆனந்த சாகரமாக விளங்குவதை உணர்கின்றான்.

துக்கத்திற்கு மௌட்டியம் காரண மாதல்போல், மௌட்டியத்திற்கு ஆதாரமாவது பேதபுத்தியாம்.

மாயாபிரகிருதியுடன் கலந்து இயங்குதலால், அந்தரான்மா விளக்கமுறுகிறதில்லை. எனினும், சிற்சில சமயங்களில், சில சம்பவங்களின் மூலமாக அதனுடைய இருப்பையும் சக்தியையும் ஒளியையும் பற்றி ஒரு சிறிது உணர்ந்தபோதிலும், சித்தத் தூய்மையும் மனோதிடமு மின்மையால், அஃதுடன் இரண்டறக் கலந்து சாந்தியடைவதற் கியலவில்லை. எனினும் கொஞ்சம் கொஞ்சமாகப் புலப்படும் ஒளியினால் ஆகருஷிக்கப்படவே, அத்துடன் எவ்விதத்திலாயினும் கலந்து ஆனந்திக்க நிர்ணயித்து ஒவ்வொரு ஆன்மாவும் அவ்வதற்கான முறை அல்லது நெறிபற்றி உழைத்து வருகின்றது போலும்.

காதலின்பத்தின் வசப்பட்டு விளையாடும் யௌவனனையும் யுவதியையும் ஒத்தவராவர் ஈஸ்வரனும் பிரகிருதியும். ஒருவரை யொருவர் தேடிப்பிடித்து இறுக அணைத்து இனிக்கும் பொருட்டு அவர்கள் ஒருவர் முன் ஒருவராக மீட்டு மீட்டும் தோன்றியும் மறைந்தும் விளையாடுகின்றனர் போலும்.

சுயசக்தியினால் மனத்தையும் தேகத்தையும் கற்பித்து அவற்றுள் புகுந்து லீலைசெய்யும் தேய்வு அழிவுகளுக்கு உட்படாத ஆன்மாதான் புருஷன் எனப்படுவது.

அப்பர்

அப்பரும் அறுபத்திநான்கு கலைகளும்—30. வியாகரணம்

[825-வது பக்கத் தொடர்ச்சி]

(2) சில சந்தவிருத்த அடிகளின் பேதம்

ஆரிய சந்தங்களை நமது கவிகள் தமிழ்மொழியில் பயிரிட்டு விருத்திசெய்தனரென்பது முன்னமே கண்டோம். அவை தமிழ்நிலத்திற் கேற்ற குணங்கள் பெற்றன. விருத்தங்களைப் போன்ற சில செய்யுள்கள் தமிழிலிருந்தனவற்றால் அவை மாறுபாடு மடைந்தன வென்பதையுங் கண்டோம்.* ஒருவகைச் சந்தவிருத்தம் ஆரியத்திலிருந்து வந்ததெனின் அதைச் சார்ந்து தமிழ்ப் பயிர்களாக அநேக சந்தவிருத்தங்கள் உண்டாயின. அவ்வாறு இயற்றினவர் திருவள்ளுவ நாயனாருக்குப்பின்னரும் நம்முடைய சமயகுரவர்களுக்கு முன்னரு மிருந்த பல கவிகள். சிலர் பௌத்தர், சிலர் சைவர். இவர்களுள் பலர் பெயர் இப்போது மறைந்துபோயின. சிலரே இன்னும் எண்ணப்படுகின்றார். ஐம்பெருங் காவியங்களில் முதன்மையும் தொன்மையுமான சிலப்பதிகாரத்தில் கானல்வரியில் காணப்படுவன விருத்தங்கள் அல்லவோ? "திங்கண்மாலைவெண்குடையான்" என்பது, "இருமா காய்ச்சீ ரரையடிக் காய் இவையே மற்றை யரையடிக்கும்" என்னும் விதி பெற்ற அறுசீர்க்கழிநெடி லாசிரியமன்றோ? ஆயினும் அப்பெயர் அங்கு வழங்கப்படவில்லை. "சேரன் மட

* சொல்வகை மூன்றுவகை யென்றும், அவை உட்சொல், புறச்சொல், ஆகாயச்சொல் என்றும், அவை,

நெஞ்சொடு கூறல் கேட்போர்க் குரைத்தல்
தத்தம் வரவறிவு தானே கூறலென்
றம்மூன் றென்ப செம்மை சொல்லே

என்றும் கூறியவர், அச்சொல்வகையை, சுண்ணம், சுரிதகம், வண்ணம் வரிதகமென நான்காய்ப் பிரித்து

சுண்ண நான்கடி சுரிதக மெட்டடி
வண்ண நன்னான்கு வரிதக மெண்ணான்கென்
றெண்ணிய வடித்தொகை யெய்தவும் பெறுமே

என்றார். வண்ணம், பெருவண்ணம் இடைவண்ணம் வனப்புவண்ணம் என மூவகையாம். அவற்றுள் பெருவண்ணம் ஆறாய் வருவது 'இடைவண்ணம் இருபத்தொன்றாய் வருவது, வனப்பு வண்ணம் நாற்பத்தொன்றாய் வருவது, நாற்பத்தொன்பதென்பாருமுளர்.

வரி எட்டுவகை-கண்கூடுவரி, காண்வரி, ஊர்வரி, புறவரி, கிளர்வரி, தேர்ச்சிவரி, காட்சிவரி, எடுத்துக்கோள் வரி என்பனவற்றுள் சில விருத்தங்களாயும் சில சந்த விருத்தங்களாயும் மருவின.

வன்னம் சேர னடையொவ்வாய்" என்பது "பித்தா பிறைசூடீ பெருமானே யருளாளா" என்னும் சந்தமாய்க் காணப்படவில்லையா? இன்னும் கானல்வரிப் பாட்டுகளில் சில சந்தவிருத்த உதாரணங்களைச் சமீபிக்கின்றன.

ஆகையால் முற்காலச் சந்தவிருத்தங்களில் சில சீர்கள் அதிகமாய்க் காணப்படுகின்றவைகளையும், சீர்கள் மாறிக்காணப்படுகின்றவைகளையும் நமதுசமயகுரவர் ஏற்றுக்கொண்டு ஆரியசந்தங்களைநினைப்பில் வைத்துச் சீர்திருத்தலானார். அப்பர் பாடிய தேவாரத்தில் பழந்தக்கராகம் என்னும் பண்ணில் காணப்படுவன இத்தகையவாம். "சொன்மாலை பயில்கின்ற குயிலினங்காள் சொல்லீரே", என்பதும் "முத்திநெறி யறியாத மூர்க்கரொடு முயல்வேனை" என்னும் மணிவாசகப் பெருமான் பாடலும், தமிழில் விலக்குறுப்பிலொன்றாகிய வரிப்பாட்டிலிருந்து வந்தனவேயாம். சிலப்பதிகாரம் கானல்வரியில் பின்வரும் பாட்டையும், அதன் பின்னர் வரும் திருநாவுக்கரசின் செய்யுளின் யாப்பையும் நோக்குக.

பறவைபாட் டடங்கினவே
பகல்செய்வான் மறைந்தனனே
நிறைநிலா நோய்கூர
நெடுங்கணீ ருகுத்தனவே
துறுமலர் அவிழ்குழலாய்
துறந்தார்நாட் டுளதாங்கொல்
மறவையா யென்னுயிர்மேல்
வந்தவிம் மருண்மாலை

சிலப்பதிகாரம் - கானல் வரி - 6.

கூவைவாய் மணிவரன்றிக்
கொழித்தோடுங் காவிரிப்பூம்
பாவைவாய் முத்திலங்கப்
பாய்ந்தாடும் பழனத்தான்
கோவைவாய் மலைமகள்கோன்
கொல்லேற்றின் கொடியாடைப்
பூவைகாள் மழலைகாள்
போகாத பொழுதுளதே.

அப்பர் - திருப்பழனம் - பண் - பழந்தக்கராகம் 8.

திருநாவுக்கரசு நாயனார் பாடிய பதிகங்களில் பழந்தக்கராகப் பண்ணமைந்த திருவையாற்றுப் பதிகம் ஒன்றுண்டு. அதன் யாப்பும் இவ்வாறே அமைந்து இருக்கின்றது:—

மின்னானை யுருவானைப் வேதத்தின் பொருளானைப்
பொன்னானைப் மணியானைப் பொருகடல்வாய் முத்தா
நின்னானை யிருவர்க்கும் காண்பரிய நிமிர்சோதி [னைய்
அன்னானை யையாறர்க் காளாய்நா னுய்ந்தேனே

திருவையாறு - பண் - பழந்தக்கராகம் 8.

திருஞான சம்பந்தர் தேவாரத்தில் பழந்தக்கராகப் பண் என்னும் தலைப்புப் பெற்ற பதிகங்கள் பதினாறு உள. அவற்றுள் செங்காட்டங்குடியில் பாடியது 10ம் செய்யுளில் மாத்திரம் "பொடிநுகருஞ் சிறுத்தொண்டர்க் கருள்செய்யும் பொருட்டாக, கடி நகராய் வீற்றிருந்தான் கணபதீச்சரத்தானே" என்னும் சிறுத்தொண்டர் புகழைக் கூறிய பதிகம் இப்பழந்தக்கராகமேயாம். அப்பர் பாடிய "சொன்மாலை பயில்கின்ற குயிலினங்காள்" என்று ஆரம்பிக்கும் திருப்பழனப் பதிகத்தின் இறுதியில் "அப்பூதி குஞ்சிப்பூவாய் நின்ற சேவடியாய்" என்றதும் மேற்கண்ட சம்பந்தர் திருவாக்கும் ஒன்றாய்ச் சேர்த்துக் காணக்கூடியன.

இவ்வாறு விருத்தங்களை இசையினின்று சுத்தஞ் செய்து சமயகுரவர் எடுத்ததால், இசையின் பயன் விளங்குமாறு ஒரு நெடிலு மொரு குறிலும் மும்மாத்திரைச் சீராய் எதிர்பார்க்கும் இடங்கள், முதலசையான நெடிலோசை சற்று அழுத்தும்படி நேரிடுகின்றது. அது ஆங்கில இசையில் (accent in rythm) முக்கியமாய்க் கவனிக்கப்படும் விஷயமாம். லாடின் (Latin) பாஷையில் அசையின் நீட்சியும், குறுக்கமும் மாத்திரம் கவனிப்பார்கள். ஆங்கிலத்தில் அசையின் அழுத்தலை (accent) கவனிப்பர். நமது பாஷையில், முக்கியமாய் விருத்தங்களிலும், நமது சமயகுரவரியற்றிய சந்த விருத்தங்களிலும், நாம் அலகிடுவோமானால் (if you scan the lines) இதனை மிகவும் எளிதாய்க் காணலாம். (உ - ம்)

இன்று நன்று நாளைநன் றென்று
நின்ற விச்சையால்
பொன்று கின்ற வாழ்க்கையைப்
போக விட்டுப் போதுமின்
மின்ற யங்கு சோதியான்
வெண்ம தி'வி ரி'புனல்
கொன்றை துன்று சென்னியான்
கோடி காவு சேர்மினே

என்னும் சந்த விருத்தம், மும்மாத்திரைத் தேமாச்சீர் இரண்டும் ஐந்து மாத்திரைக் கூவிளச்சீர் ஒன்றும் சேர்ந்து மூன்று சீர்கள் ஒவ்வொரு அரையடியின்கண்ணும் அமைந்து விளங்குகின்றன. அவ்வாறு அலகிடுவதில் இச்செய்யுளிலேயே இரண்டு சீர்கள் நமக்குத் தட்டித்து நிற்பதுபோல் காணப்படுமாயினும், இசையில் அவ்வாறு இருப்பதில்லை. இங்கு 3-ம் அடியில் 'வெண்மதிவிரிபுனல்' என்னும் சொற்றொடர் மூன்று சீர்களாய்ப் பிரியும். அவையாவன: 'வெண்ம'-ஆகிய குறிலீற்றுத் தேமா ; 'தி வி' என்பது மற்றொன்று; அதைத் திவி யென்று பாடலாகாது. 'தி இ இ வி' என்றும், ரிபுனல் என்பதைப் புளிமாவாய் இசைக்காமல் 'ரி இ இபுனல்' எனக் கூவிளமாயும் இசைத்தாலன்றிப் பாட்டின் அந்தங் கெடும். மற்றும் அப்பதிகத்தின் திருக்கடைக்காப்பு இத்தன்மையைக் காட்டக் கூடிய நல்ல உதாரணமாம்:—

கொந்த ணி-கு ளிர்பொழில் கோடி காவு மேவிய
செந்த ழ-னு ருவனைச் சீர்மி கு-தி ற-லுடை
அந்த ணர்பு க-லியு ளாய கேள்வி ஞானசம்
பந்த ன்-த மிழ்வல்லார் பாவ மான பாறுமே

இதில் 'ணிஇ இ கு', 'ழஅ அ னு', 'ரு உ உவனைச்' 'குஉ உதி', "றஅ-லுடை," 'கஅலியு,' 'ன்அத' எனக் குறில்களை நெடிலாக்காமல் நாதத்தை நீளவாசித்தால் இயற்றமிழ் அலகு சரியாகக் காணப்படும். இப்பழக்கம் அப்பர் காலத்தில் சாதாரணமாதலால் அவர் தேவாரத்திலும் காணலாம்.

எட்ட விட்டவி டு-மண லெக்கர்மேல்
பட்ட நுண்டுளி பாயும்ப ராய்த்துறை

என்பதில் 'டு' என்பது இசையில் அழுத்தத்தைப்பெறக் கூவிளம்போல் ஒலிக்கும். இது கம்பராமாயணச் சந்த விருத்தங்களிலும் காணலாம். நாம் கூவிளம் எதிர்பார்க்கு மிடத்தில் கம்பன் புளிமா உபயோகித்தால் இசையில் அப்புளிமாவின் முதல் குறில், நெடிலளவு நாதம் பெறுவதைப் பாடி யறியலாம்.

இந்நுட்பத்தை நாம் கவனியாமல் விடுவோமாயின் அப்பர் திருத்தாண்டக விருத்தப் பதிகங்களில் ஒன்றாகிய திருவதிகை வீரட்டானம் - திருவடித் திருத்தாண்டகத்தை அலகிடுதல் கடினமாகும். அது அறுசீரா, அல்லது எண்சீரா என்பதே சந்தேகமாகும். இசையில் குறில் ஒன்றே நாதத்தில் மூன்று மாத்திரையளவு நீட்சி பெறுமாதலால், அவ்வெழுத்து ஒன்றே ஒரு சீருக்குப் பதிலாய் அலகில் நாம் எடுக்கலாகும். நீட்சி யென்றால் நீட்டல் விகாரமன்று. நமது சந்த விருத்தங்களில் நீட்டல் விகாரத்தை நமது கவிகள் பயன்படுத்தவில்லை. ஏனெனில் செய்யுள்கள் ஒவ்வொன்றும் இயற்றமிழ் யாப்பிலக்கணத்தை மாத்திரம் கவனியாமல், இசையிலக்கணத்தை நன்குணர்ந்து பாடி, நடிக்கப்பட்டமையால், ஒரு சொல்லின் எழுத்துக்களைச் செங்கற் கட்டடம்போல் கருதாமல் உயிருள்ள ஜீவனைப்போல் நமது கவிகள் நோக்கிப் பாடுவாராயினர். ஆதலால் ஆரிய சந்தங்களைப் பயன்படுத்திய நமது கவிகளும் ஆரிய நடையில் செல்லாது செந்தமிழ் நடையில் முத்தமிழ் இலக்கணம் பொருந்தப் பாடினரென் றுணர்க.

இவ்வாறு நமது மொழியின் சுவதந்தரத்தன்மையால் வடமொழியினின்று வந்த ஒவ்வொருவகை விருத்தமும் தமிழ்க் குளிகையிட்டு உருக்கப்பட்டதால் அந்தச் செப்புருவங்கள்யாவும் வடமொழிக் களிம்பு நீங்கிப் பொன்னாய்த் தமிழில் மாறின. ஆதலால் வடமொழியின் மூலகாரண சம்பந்தத்தைத் தமிழ்ச்சொல் அல்லது செய்யுளுக்குக் காட்டக்கூடுமாயினும் அவ்வாறுமாறிய நூதன வடிவான செந்தமிழ்ச் சொல்லும் செந்தமிழ் நடையுமாய் விளங்குவதால் திருஞான சம்பந்தர் தனது தேவாரம் எவ்விதத்திலும் தமிழே என்று தமது திருக்கடைக்காப்புச் செய்யுட்களில் வற்புறுத்துகின்றனர்:—

கற்று முற்றி னார்தொழுங்
கழும லத்தருந் தமிழி
சுற்று முற்று மாயின
னவன்ப கர்ந்த சொற்களால்
பெற்ற மொன்று யர்த்தவன்
பெருந்து ருத்தி பேணலே
குற்ற முற்று மின்மையில்
குணங்கள் வந்து கூடுமே.

—திருத்துருத்தி - பண் - நட்டராகம் 11.

நம்மாழ்வார் வைபவம்

திருவாய்மொழி

6-ம் பத்து 2-ம் தசகம்

[827-ம் பக்கத் தொடர்ச்சி]

2-ம் பாசுரம்.

போகு நம்பீயுன் றமரை புரைகண் ணிணையுஞ்
செவ்வாய் முறுவலும்
ஆகுலங்கள் செய்ய வழிதற்கே
நோற்றோ மேயாம்
தோகைமா மயிலார் நின்னருள் சூடுவார்
செவியோசை வைத்தெழ
வாகள் போகவிட்டுக்
குழலூது போயிருந்தே.

ஊர், ஆயர்பாடிக்கு அடுத்த காலி மண்டபம். கோபியும் தோழிமார்களும் பூவைகள் கிளிகள் சிற்றில் கோலத் தட்டுமுட்டுச் சாமான்கள், அடிசில் அடவும் இடவும் வேண்டிய சாதனங்கள் இவைகளைப் பரப்பிச்சுற்றி வட்டமாய் உட்கார்ந்து கழகம்கூடி ஆட்டம் ஆடுகின்றனர். கிருஷ்ணன் பந்தும் கழலும் எடுத்து நின்று ஆடிக் கோபியோடு வாதாடுகின்றான்.

அவதாரிகை:—சென்ற பாசுரத்தில் இக் கோபிபிராட்டி இரண்டு வேண்டுகோள்கள் அபேக்ஷித்தாள். முதல், தங்கள் பந்தையும் கழல்களையும் அவர்களுக்குத் திருப்பிக்கொடுத்தல். கிருஷ்ணன் இவற்றைத்தன் பிரிய பிராட்டிக்குப் பிரிதிநிதியா யெடுத்து ஆடுபவன் அவற்றைக் கைவிடுவானோ? இரண்டாவது, அவர்கள் கழகம் விட்டு நீங்கி வெளியே போகுதல். இப் பிரிய பிராட்டி ஏற்கனவே இவனுக்கு அருமைக் கண்ணாட்டி. "பொன்மலர் நாற்றமுடைத்து" என்று சொல்லலாகும்படி இவள் தன் ஸம்பாஷணையில் தேன்மொழி மொழிகிறாள். சிற்சில பேச்சுக்கள் அவன் மனதில் தைத்தாலும் அது தன் அஜாக்கிரதையாலும் தங்களை உபேக்ஷித்தானென்று அவர்கள் எண்ணத்தக்க நெடுநேர தாமதத்தாலும் ஏற்பட்டது என்று தெளியவே அவன் வெகுள இடமில்லாமல் போயிற்று.

குறிப்பு I:—சென்ற பாசுரத்தின் உரையில் விவரித்தபடி இப்பிராட்டி கிருஷ்ணனிடத்தில் குறை கொண்டு ஸம்பாஷணம் செய்தாளேயாயினும் அப்பேச்சின் சாதுரியமும், அவன் வயையே மடக்கி அவனைக் குற்றம் சாட்டற்கு ஏற்படுத்திய சாமர்த்தியமும், மேன்மேல் வாக்குக்கொடுத்து அவனைத் தரைப்படுத்த செய்த சூழ்ச்சியும் அவன் வாய்திறக்க வொண்ணாதபடி அகப்படுத்திய விந்தையும் கண்ணனுக்கு வெகு ரஸாநுபவத்திற்கு இடமாய்த் தீர்ந்து அவனை ஒருவாறு களிப்பூட்டின. இவைகளின் நிமித்தமாய் அவனுக்கு முகமலர்ச்சி யுண்டாய்ப் புதுக்கணித்த திருக்கண்களையும் திருப்பவளத்தையும் காட்டி அப்பிராட்டியினிடத்திலுள்ள அதிசய பிரீதியை வெளிப்படுத்தினான். இதைத்தான் இப்பாட்டின் முதலடி எடுத்துரைக்கிறது.

குறிப்பு II:—இவனது இவ்வேட்கைக் குறிப்பும் அதைத் தூண்டிய மன உகப்பும் தன்னைப்பற்றிப் பிறந்திரா வென்றும் வேறே சில வடிவழகு வாய்ந்த பிராட்டிமாரை நினைத்து வந்ததாகவும் இவள் சிந்தித்து, நாங்கள் இந்தச் சந்தோஷத்தைப் பார்த்தனுபவிக்கப் பூர்வ ஜந்மத்தில் நற்செய்கை செய்து பிறந்தவரல்லர்; இவற்றை யெல்லாம் உன்னோடு கூடியனுபவிக்கப் பிறந்த புண்ணியம் செய்தவர்கள் இங்கில்லை. அங்கேபோ" வென்று அவனை நோக்கின முகத்தைக் தாழவிட்டுப் பூமியைப்பார்த்த வண்ணமாய் உதாஸீந புத்தியுடன் உரைத்தாள்.

குறிப்பு III:—அவள் தலை சாய்ந்ததும் கண்ணன் இவளது கூந்தல் கலாபத்தையும் அதன் வரிசையையும் வர்ணத்தின் காந்தியையும் கண்டும், அதிலிருந்து வீசும் சுகந்தத்தையும் முகர்ந்தும் 'இது வல்லவோ

கவிகள் புகழ்பாடும் மயிற்ரேகை'' என்று பணித்தான்.

குறிப்பு IV:—இவள்,“மயிற்ரேகை”என்ற பதங்களைக் கொண்டே “அத்தோகை உள்ளவர்கள் ஆய்ப்பாடிக்குப் புறத்திருக்கின்றார்கள். உன்னை எதிர்பார்த்திருப்பார், அங்கோ போ'' வென்று சொல்கிருள்.

குறிப்புV:—அவளது அப்பேச்சு முடியாமுன்னர், இப்பிராட்டி தன் கைக்கு வந்துவிடுவாளென்று உற்சாகங்கொண்டு கண்ணன் தன் புல்லாங்குழல் வாத்தியத்தை யெடுத்து வழக்கம்போல மனமுருகச் சங்கீதம் தொடங்கினன். “போயிருந்து குழலூது” எங்கள் பிரியம் உனக்கேன் இங்கே வேண்டுவதில்லைஎன்ருள்.

குறிப்புVI:— இப்பிராட்டியோ கண்ணன் வெளியிறங்கிப்போய் மற்றைய கோபிமார் கூட்டத்தில் சேர்ந்து அநுபவிக்க அவர்களின் சிற்றம் தடுக்குமென்று அஞ்சி வகைதெளியாதிருக்கிருனென நினைத்து அவனுக்குத் தன் கருத்தை நிர்வஹிக்க வோர் உபாயம் கற்பிக்கின்ருள். அதென்னெனில், “பசுக்களைக் கழியப் போகவிட்டு அவற்றை அழைக்கிருப் போலே ஆய்ச்சியர்க்காகவே நீ ஊதுந் தீங்குழலை ஊது.”

பொழிப்புரை:-இப்படி எம்பெருமானை உத்தேசித்துத் தான் சொன்ன வார்த்தைகளாகிற வமிர்த வருஷத்தாலே யவனுஜ்ஜீவித்து நிரதிசயபிரீதி யுக்தனுய்ப் புதுக்கணிந்த திருக்கண்களையும் திருப்பவளத்தையு முடையவனுயிருந்தவிடத்து,இதுவெல்லா மவர்களாகக் கருதி யிவனுக்கு வந்ததாகக்கொண்டு இவ்வழகை யாசைப்பட்டுப் பெருதே வருந்தி மாயப் பிறந்தவர்கள் நாங்கள். இவ்வழகைக் கண்டு வாழப் பிறந்தவர்கள் அல்லோம்.“தோகைமா(வளம்)மயிலார்கள் நின்னருள் சூடுவார்கள். நீயுமங்கே போய் அவர்களோடே கலந்து பறிமாறு” என்றிவள் சொல்லப் பின்னையும்அவன் எழுந்தருளாதிருந்தவாறே போனு லவர்களைச் சந்திக்கைக்கு உபாயமறியாமே இருக்கிருயோ? அதில் நல்லதொரு உபாயமுண்டு.அதென்னென்னில் பசுக்களைக் கழியப் போகவிட்டு அவற்றை யழைக்கிருயாய் ஆய்ச்சிமாருக்கே ஊதுந் தீங்குழல் போயிருந்தூது என்கிருள்.—ஆருயிரப்படி.

விசேஷ பதக் குறிப்பு:—“சூடுவார் செவி வைத்தெழ”—ஆய்ச்சியருக்கே குழலூதும் கண்ணனோடு முன்பு கூட்டியே சங்கேத மேற்பட்டு அவன் ஊதுகிறபடியால் “வைத்து” என்ருர். “எழ”— தீங்குழல் கேட்டதும் எங்குள்ளவரும் திரண்டு வந்துகூடி ரஸாநுபவம் செய்வார்களென்றபடி. ஆகுலம்—“வியாகுலம்'' என்கிற ஆரிய பதத்தின் திரிபு - வியஸநம்.

விசேஷக் குறிப்பு:—உன்னருள் சூடுவார் என்றதற்கு இப்பிராட்டியின் கருத்து “உன் காலில் விழுவார்கள்”என்று இப்பிராட்டியின் மனமும் கரையத் தீங்குழலூதினுலும் கண்ணனுக்கு இடியும் புடையுமாய்த் திருகிறது. என் செய்வான்! ஐயோ பாவம்!

3-ம் பாசுரம்.

போயிருந்து நின்புள்ளுவ மறியாத
வர்க்குரை நம்பீ நின்செய்ய
வாயிருங் கனியும் கண்களும்
விபரீத மிந்நாள்
வேயிருந் தடந்தோளி னரித் திருவருள்
பெறுவார் யவர்கொல்
மாயிருங் கடலைக் கடைந்த
பெருமானலே

அவதாரிகை:—வேறு சில பிராட்டிமாரிடத்திலுள்ள அளவிறந்த பிரீதியாலே கண்ணன் தம்மை அவர்களாகப் பிரமித்துத் திகைத்துப்பேசுகிருனென்று கீழேசொல்லியாயிற்று. இப்பாசுரத்திலும் அந்தப் பிரமைகொண்டே அவர்களுக்கு ஊதும் புல்லாங்குழலை இவன் உளறுகிருனென்று திரும்பி இப்பாசுரத்தில் கூறுவதற்கு என்ன பிரஸக்தி யென்றால்? வெகுபிரீதியுக்தனுயும் மந்த ஸ்மிதனுயும் புல்லாங்குழல் ஊதத்தடங்கிய கண்ணன் இவள் வார்த்தையினது சாதுர்யத்தினுல் இவள்மேல் உற்ற காதல் வளரவே அதினுல் முன்னேயே அன்புமிகுந்த இப்பிராட்டியின் ஊடலை உணர்ப்பின்கண் கொணர்வித்துக் கூடிய சீக்கிரத்தில் அவளன்பை வளர்த்துச் சிர்பெறலா மென்று நிச்சயித்துவிட்டான். இவ்வெண்ணம் குடிகொள்ளவே முன்பேயே குழலூத உற்சாகங்கொண்ட இவன் முன்னையிலும் பதின்மடங்கு சந்தோஷப்பட்டு அகமலர்ச்சி முகமலர்ச்சியுடன் கூடினவனுய் நிமிஷ நிமிஷத்திற்குப் புதிதான மேனியும் அற்புதமான வண்ணமுமாய்த் தென்பட்டான். இப்பிராட்டி இவ்வளவு சந்தோஷம் இவனுக்கு மிதமிஞ்சி எல்லை கடந்ததை நாம் கண்டும் கேட்டுமில்லையே? காரணம் இவன் நம்மை இவனுக்கு வெகுப் பிரியமாயுள்ள பிராட்டியாய்க் கணிசித்துவிட்டானுதலால் பிரமையின் காரியமென்று ஊஹித்து முதலில் மருண்டு பிறகு வெருண்டாள்.

இவன் பந்தைக்கைவிட்டதும் கவனிக்கவில்லை; இவன் ஊதும் இராகத்தின் ஆரோஹண மூர்ச்சை இறந்தவர்களையும் பிழைப்பிக்கக் கூடியதாயிருந்தபோதிலும் அதனின் சீரிலும் மேம்பாட்டிலும் அவள் மனமூன்றவில்லை. இவள் தன் குறையையே பாராட்டநாடியவளாக இருக்கக் கண்ணன் நாம் தீங்குழல் ஊதுவது வேறே சில கோபிமாரை அழைக்கச் செய்கின்ற உபாயமென்று இவள் எண்ணுகிருளென்று சங்கைப்பட்டு, பசுக்களை அழைக்கக் குழலூதுவது ஜாதிக் கடமையால் எனக்கு பிராப்தமல்லவோ? பசுக்களைத் திரியவொட்டாமல் ஒருங்குபடுத்திச் சேர்க்கவே ஊதினேன், இவ்வளவே? உன்னைத் தவிர என் அன்புக்கு உரித்தானவர் உளரோ? நானறிவேனே?'' என்று அருளிச்செய்தான். இப்படித்தான் கோபிக்கு உத்தரம் தரவே, “இப்பொய்களை (புள்ளுவம்) உன்னை அறியாதவர்களுக்குச் சொல் அவர்கள் நம்புவார்கள்'' என்று சொல்லி இவனை அவமதித்துப்பார்த்தவளாய் இவனது விபரீதமான (Very special) ஸௌந்திரியத்தைப் பொருமையோடும் ஆச்சரியத்தோடும் பார்த்திருந்தகண்களை மீட்டுத் தலைகவிழ்ந்து பராமுகமாக வேயிருந்து பின்னர்த்தன் மனதாலாராய்ந்து அந்தோ! இதென்ன அற்புதம்!! சமுத்திர மதன காலத்தில் இலக்குமி பெரியபிராட்டி அமிர்தத்துளிகள் வாய்ந்த கூந்தலோடு உத்பவித்த காலத்திலும் இவன் இவ்வளவு ஆனந்தபரவசனு யிருந்திருக்கமாட்டா னென்பது திண்ணம். இந்த சோபையையும் அழகையும்எந்தத் தோளழகுள்ள பாவை அநுபவிக்கப்புண்ணியம்செய்தவளோ? நமக்கில்லை'' என்று உட்கொண்டு கண்ணன் எங்கேயோ போய் ஏதோ வொரு சரித்திரத்தை எக்காலத்திலேயோ இயற்றியவனுக வார்த்தையைப்பேசி முடித்தாள். “கடல் கடைந்த பெருமானலே” என்றது அவன் அடுத்திருந்தாலும் இல்லைபோல் ஓர்வித அந்நியாபதேசம்.

பொழிப்புரை:—“இப்படி, இவன்மேன்மேலான இவனுடைய அமிர்தம்போன்ற வார்த்தைகளைக் கேட்டதினுலே வந்த அளவுகடந்த பிரீதியாலே அற்புத திவ்விய ஸௌந்தரியமான திருப்பவளத்தையும் திருக்கண்களையுமுடையவனுய்க் கொண்டு சில விநய (பனிமொழி) வார்த்தைகளை யருளிச்செய்ய இவற்றையெல்லாம் உள்னுடைய கிருத்திரமங்களறியாதாருக்குப் போயிருந்து சொல்லென்று அவனை அவமதித்துப் பேசி, உன்னுடைய திருப்பவழங்களும் திருக்கண்களும் அழகிருந்தபடி யென், கண்டும் கேட்டும் அறியாததொரு படியான விவ்வழகு திருப்பாற் கடலிலே அமிர்தம் கடைந்த சமயத்திலே தோன்றி அமிர்த சிகாலங்கிரதையாய் அபரிமிதமான திவ்விய ஸௌந்தரியத்தையும் குண பரிபூரணத்தையுமுடைய பெரிய பிராட்டியாரோடு அன்று கலந்த கலவியாலும் பிறந்ததில்லை. இப்படிப்பெரிய பிராட்டியாரைக்காட்டிலும் உனக்குப் பிடித்தவர்களாய் உன்னை யநுபவிக்க பிறந்தவர்களாவரோ வென்கிருள்—ஆருயிரப்படி.

பதக் குறிப்புக்கள்:—வேயிருந் தடந்தோளினர்-மூங்கில்முனையைக்காட்டிலும் பொன்வர்ணமாயும் அடிபெருத்துக்கிரமக்கிரமமாய் வர்த்துளத்தில் குறைந்து அழகாயமைந்த தோள்களையுடையவர்.

யாப்பிலக்கணம்

[834-வது பக்கத் தொடர்ச்சி]

வண்ணம்

11. அகப்பாட்டு வண்ணம்:-அகப்பாட்டு வண்ணம் என்பது, முடியாததுபோலத் தோன்றி முடிந்து நிற்கும் செய்யுளாம். அஃதாவது, இறுதியடி இடையடி போன்று நிற்பதாம். அத்தகைய செய்யுளில் முடித்துக் காட்டும் ஈற்றசை ஏகாரத்தால் முடியாமல், ஏகாரம் ஒழிந்த மற்ற உயிரீற்றாலும் ஒற்று ஈற்றாலும் அமைந்து நிற்குமென அறிக. உ - ம்:—

பன்மீன் உணங்கல் படுபுள் ஓப்பியும்
புன்னை நுண் டாது நம்மொடு தொடுத்தும்
பன்னுள் வந்து பணிமொழி பயிற்றித்
தோழி நீங்காமை சூளிற் றேற்றியும்
மணந்ததற் கொவ்வான் தணந்து புறமாறி
இனைய னுகி யீங்குனைத் துறந்தோன்
பொய்த லாயத்துப் பொலங்கொடி மகளிர்
கோடுயர் வெண்மண லேறி
ஓடுகல மென்னும் துறைவன் தோழி.

12. புறப்பாட்டு வண்ணம்:-புறப்பாட்டு வண்ணம் என்பது முடிந்தது போலத் தோன்றி முடியாது நிற்குஞ் செய்யுளாம். உ - ம்:—

'இன்னே செய்திரீ முன்னிய வினையே
முந்நீர் வரைப்பக முழுதுடன் துறந்தே.'

நிலைமண்டில ஆசிரியப்பாவின் ஈற்றடிகளாகிய இவ்விரண்டடிகளில் முன்னடியோடு செய்யுள் முடிந்துவிட்டது போலத் தோன்றினுலும், அங்ஙனம் அவ்வடியோடு முடியாது மற்றுமோரடி கொண்டு முடிந்தமை யறிக.

நிலவுமண லகன்றுறை வலவ னேவ
வின்றி மணிப்புள் ளினமெடுப்ப நெருநலும்
வந்தன்று கொண்கன் தேரே; இன்றும்
வருகுவ ாயிற் சென்று சென்று
தோன்றுபு துதைந்த புன்னைத் தாதுகு
தண்பொழின் மெல்லக வனமுலை நெருங்கப்
புல்லி னெவனே மெல்லிய னீயும்
நல்காது விடுகுவை யாயின் அகலும்
படர்மலி யுள்ளமொடு மடன்மா வேறி
உறுதுய ருலகுட னறியநஞ்
சிறுகுடிப் பாக்கத்தும் பெரும்பழி தருமே.

இந்தச் செய்யுளும் மூன்றும் அடியுடன் முடிந்தது போன்று முடியாமை யறிக.

13. ஒழுகு வண்ணம்:—ஒழுகு வண்ணம் என்பது, தட்டுத் தடங்கலின்றி ஒழுகி நடக்கும் ஓசையை யுடையதாகப் பாடப்படுவதாம். உ - ம்:—

'அம்ம வாழி தோழி காதலர்
இனமீன் பனிக்கும் இன்னு வாடையொடு
புன்கண் மாலை யன்பின்று நலிய
உய்யல ளிவளென உணரச் சொல்லிச்
சொல்லுநர்ப் பெறினே செய்ய வல்ல
வின்னனி யிறந்த மன்னவர்
பொன்னணி நெடுந்தேர் பூண்ட மாவே.

14. ஒரூஉ வண்ணம்:—ஒரூஉ வண்ணம் என்பது, செந்தொடையாக அமையுஞ் செய்யுளாம்.

தொடிநெகிழ்ந் தனவே கண்பசந் தனவே
யான்சென் றுரைப்பின் மாண்பின் றெவனே
சொல்லாய் வாழி தோழி வரைய
முள்ளில் பொதுளிய வலங்குகுலைநெடுவெதிர்
பொங்குவா ளிளமழை துவைப்ப
மணிநிலா விரியுங் குன்றுகிழ வோற்கே.'

குறிப்பு:—'யாற்றொழுக்குப் போலச் சொல்லிய பொருள் பிரிதொன்றனை அவாவாமை அறுத்துச் செய்வது ஒரூஉ வண்ணம்,' என்பது தொல்காப்பியத்தில், 'ஒரூஉ வண்ணம் ஒரீஇத் தொடுக்கும்,' என்னுஞ் செய்யுளியலின் சூத்திரத்திற்குப் பேராசிரியர் கண்ட உரையாகும். அப்பேராசிரியர் பின்னும், 'ஒரீஇத் தொடுத்தலென்பது, எல்லாத் தொடையும் ஒரீஇச் செந்தொடையால் தொடுத்தலென்பாரும் உளர்,' என்று கூறிப் பின்வருங் குறுந்தொகைச் செய்யுளை ஒரூஉ வண்ணத்திற்கு உதாரணங் காட்டுவர்.

'யானே யீண்டை யேனே யென்னலனே
ஆனு நோயொடு கான லஃதே
துறைவன் தம்மூ ரானே
மறையல ராகி மன்றத் தஃதே.'

15. எண்ணு வண்ணம்:—எண்ணு வண்ணம் என்பது, செவ்வெண்ணினுலும் உம்மை எண்ணினுலும், என எண்ணினுலும், என்ரு எண்ணினுலும், சீர்கள் அடிகளிற் பயின்று வரத் தொடுக்கப்படுவதாம்.

உ-ம்:—பொறையன் செழியன் போர்வேற் கிள்ளி
கொல்லி கொற்கை நல்லிசைக் குடந்தை
பாவை முத்தம் பல்லிதழ்க் குவளை
ஆயிழை நல்லா ளரிவை
மாயோள் வெண்பல் சேயரிக் கண்ணே.'

இச்செய்யுளிற் செவ்வெண் பயின்று வந்துள்ளமை காண்க. செவ்வெண்ணாவது, எண்ணிடைச் சொல் தொக்கு வருவதாம்.

16. அகைப்பு வண்ணம்:—அகைப்பு வண்ணம் என்பது, அறுத்தறுத்துச் சொல்லப்படுவது. உ-ம்:—

தொடுத்த வேம்பின்மிசைத் துதைந்த
பொந்தையிடை
இசைத்தவாரம் மலைப்பாட்டு ரண்ண
லென்பொனியன்ற
சேனைமுர சிரங்குந் தானையெதிர் முயன்ற
வேந்தருயிர் முருக்கும் வேலின் னவன்.

17. தூங்கல் வண்ணம்:—தூங்கல் வண்ணமென்பது, வஞ்சிப்பாவுக்குரிய தூங்கலோசை பயின்று வரப் பாடப்படுவதாம். வஞ்சிப் பாவையே இதற்கு உதாரணமாகக் கொள்ளலாம்.

18. ஏந்தல் வண்ணம்:—ஏந்தல் வண்ணம் என்பது வந்த சொல்லே பின்னும் வரத் தொடுக்கப்படுவதாம். உ-ம்:—

வைகலும் வைகல் வரக்கண்டு மஃதுணரார்
வைகலும் வைகலை வைகுமென் றின்புறுவர்
வைகலும் வைகற்றம் வாணாள்மேல் வைகுதல்
வைகலை வைத்துணரா தார்.

19. உருட்டு வண்ணம்:—உருட்டு வண்ணம் என்பது, அராகம் என்னும் உறுப்புடையதாகப் பாடப்படுவது. வண்ணகவொத்தாழிசைக் கலிப்பாவை இவ்வண்ணத்திற்கு உதாரணமாகக் கொள்ளலாம்.

20. முடுகு வண்ணம்:—முடுகு வண்ணம் என்பது, அராகந் தொடுத்த அடியோடு பிற அடி பொருந்தத் தொடர்ந்தோடுவது.

நெறியறி செறிகுறி புரிதிரி
பறியா வறிவனை முந்துறீஇத்
தகைமிகு தொகைவகை யறியுஞ்
சான்றவ ரினமாக
வேய்புரை மென்றோள்
பசலையும் அம்பலும்

எனக் கலித்தொகை 39 - ஆம் செய்யுளில் அராகந் தொடுத்த அடியோடு பிற அடிகள் பொருந்தத் தொடர்ந்து ஓடுதலை அறிக.

குறிப்பு:—அவிநயனார் முதலிய யாப்பாசிரியர்கள் வண்ணத்தை நூறாக வகுத்தும் பிறவாறும் வழங்குவர்.

கம்பராமாயணம்

ஆரணிய காண்டம்— 10. கவந்தப் படலம்.

[833-வது பக்கத் தொடர்ச்சி]

இராமனோடு கம்பருந் தளர்தல் இயற்கையே.

விராதனுக்குங் கவந்தனுக்கும் வெகு தூரம். ஆரணிய காண்டத்தின் இருகோடியில் நின்று, இராகவன் கைகளாற் சாபம் தீர்ந்து பண்டை வண்ணத்தராகிய இவ்விருவர்தம் சரித்திரமும் பெரும்பான்மை ஒத்திருக்கின்றனவாயினும் அவைகளை நிகழ்த்தும் கம்பருடையபாசுரங்கள்விராதன்கதையை விளம்பிய ஊக்கத்தினின்று மிகவும் தளர்ந்தே இக் கவந்தன் கதையைப்பகருகின்றன. ஆரணியகாண்டத்தின் இறுதியில் இராமனேபோல் அவனைப் பாடிய புலவரும் கிளர்ச்சியின் றித்தோன்றுகின்றனர். மற்றெல்லாத்திறமையும்போல் கவித்திறமையும் சிற்சிலபோது சோர்வடைந்து நடப்பதுண்டு. இந்தச் சோர்வு கம்பரையுமேபற்றியதென்றால், அச்சோர்வின் ஆற்றல் உரைக்கப்படுகின்றதேயன்றிக் கம்பருக்குப் பழுதுரைத்தபடியாகாது. இராமன் தான் சாதலே நலம் எனப் புலம்புவதும், இலக்குவன் அது செய்யவேண்டாவெனத் தடுத்தலும் ஒருவாறு ஓதக்கூடியனவாயிருக்கின்றன. மற்றவெல்லாம், கவந்தன் துதி உள்பட, படலத்திற்கு இத்தனை செய்யுள் என்னும் பான்மையதே.

கவந்தன் வரலாறு கம்பரது நூலில் விரிவுறக் கூறப்பட்டில்லாமையால், அதனை வான்மீக முனிவர் உதவியபடி உணர்ந்துகொள்ளல் நலம்:—

காடுமுழுதும் நிறைந்து ஒரு பேரிரைச்சல் கேட்டது. அச்சத்தம் எங்கிருந்து வந்ததென்று உற்று நோக்கின இராமலக்ஷ்மணர்கள் மிக்க பெரிய உருவத்தையும் பெரிய தொடையையுமுடைய அரக்கனொருவனைக் கண்டார்கள். அவர்களுக்கு முன் தோன்றிய அவ்விராக்ஷசனுடைய ரூபம் தலையற்ற கபந்தமாய் வயிற்றில் வாயுடையதாயிருந்தது. அவனுடைய உடலம் கூரிய மயிர்கள் மூடி ஒரு பெரிய மலைபோன்றிருந்தது. அவன் நிறம் கார்மேகம் போன்றிருந்தது; குரல் மேகமுழக்கம்போன்றிருந்தது. அவனுடைய விசாலமான கொடிய ஒற்றைக்கண் மார்பிலுள்ள நெற்றியில் தீப்போல் எரிந்துகொண்டிருந்தது. பெரிய இமைகள் மஞ்சள் நிறமுள்ளவைகளாயிருந்தன. வாய் மிகவும் அகன்றதாயும் பெரிய பல்வரிசைகளையுடையதாயுமிருந்தது. அந்தப் பயங்கரமான வாயை அவன் நாக்கைநீட்டி அடிக்கடி நக்கிக்கொண்டிருந்தான். அவ்வரக்கன் யோசனை தூரம் தனது இரண்டு கைகளையும் நீட்டி அவற்றிற்குள் அகப்பட்ட மான் கரடி சிங்கங்களைப் பிடித்துப் புசித்தான். மற்ற மிருகங்கள் பக்ஷிகளையெல்லாம் கையாற் பிடித்தெறிந்துகொண்டிருந்தான். அவன் வழியை மறித்து இராமலக்ஷ்மணர்கள் வரவை எதிர்பார்த்திருந்தான். அவர்கள் ஒரு குரோசதூரஞ் சென்று கைகளினால் மிருகங்களை எல்லாம் வழிமறித்துத் தடுத்துக்கொண்டிருக்கிற பயங்கரமான கோரரூபமுள்ள கவந்தனைக் கண்ணுற்றார்கள். அப்போது கவந்தன் தனது பெரிய கைகளை நீட்டி இராமலக்ஷ்மணர்களைப் பிடித்துத் தனது பலத்தினால் நெரித்தான். அவன் கையில் சிக்கி வாளும் வில்லு மேந்தியுள்ள பெருந்தோள்களையுடைய மகா பலவான்களாகிய இராமலக்ஷ்மணர்கள் நலிவடைந்தார்கள். இராமர் சூரத்துவமும் பொறுமையுமுடையவராதலால் அதிகம் வருந்தவில்லை; லக்ஷ்மணர் சிறு பிள்ளையாகையாலும் பொறையின்மையினாலும் மிகவும் துன்பம் அடைந்தார். லக்ஷ்மணர் அதிக துயருற்றுத் தமையனாரைப் பார்த்து "வீர, என்னைப் பாரும்; நான் இவ்வரக்கன் கையில் சிக்கிக்கொண்டேன். என்னை இங்கு விட்டுவிட்டு, ஓ ராகவ, நீர் தப்பித்துக்கொள்ளும். என்னைப் பலியாகக் கொடுத்துவிட்டு நீர்போய்ச் சுகமாகத் தப்பித்துக்கொள்ளும். நீர் சீக்கிரம் சீதையையடைந்து நமது பழைய இராச்சியத்தையும் நிச்சயமாகப் பெற்றுக் கொள்வீரென்று நான் எண்ணுகின்றேன். ஓ காகுத்த, நீர் அப்படிச் சிம்மாசனமேறினபோது என்னை மறவாதிராக" என்றார். லக்ஷ்மணர் இவ்வாறு சொல்ல, இராமர் அவரைப்பார்த்து, "வீர, வீணில் அஞ்சற்க. உன்னைப் போன்ற வலியுள்ளவர்கள் ஒருபோதும் பயத்தால் நலியமாட்டார்கள்" என்றார். அப்போது அந்தக் கொடிய பெருந் தோள்களையுடைய அரக்கனாகிய கவந்தன் இராம லக்ஷ்மணர்களை நோக்கி "எருத்தின் கழுத்துப்போன்ற கழுத்தையுடையவராய்ப் பெரிய வாளும் வில்லும் ஏந்திய நீவிர் யாவர்? இந்தப் பயங்கரமான இடத்துக்கு வந்து என் கண்ணில் காணப்பட்டுவிட்டீர்கள். இவ்விடத்தில் நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்? எதற்காக இவ்விடம் வந்தீர்கள்? இங்கே பசியால் வருந்திக்கொண்டிருக்கும் என்னிடம் நீங்கள் விற்களையும் கத்திகளையும் அம்புகளையும் ஏந்திக்கொண்டு கூரிய கொம்புள்ள இரண்டு ரிஷபங்கள்போல வந்திருக்கின்றீர்கள். என்னை விரைந்து கிட்டியபின் நீங்கள் உயிர் பிழைப்பது கஷ்டம்" என்றான். கொடியனாகிய கவந்தன் இவ்வாறு கூற இராமர் முகம் வாடி லக்ஷ்மணரைப் பார்த்து, "உண்மையான பராக்கிரமமுடையவனே, நமக்கு ஒன்றன்பின் ஒன்றாய்ப் பெருந் துக்கங்கள் விளைந்துகொண்டிருக்கின்றன. உயிர்போதற்கு ஏதுவாகிய பெருந்துக்கம் சீதையை நாமிழந்ததனால் முன்னமே நமக்கு உண்டாகியிருக்கிறது. ஓ லக்ஷ்மணா, விதியிற்பெரிய வலியுள்ளது யாது? உன்னையும் என்னையும் விதியின் வலியால் துக்கம் வந்து இப்படிச் சேர்ந்துகொண்டதுகாண். அதைத்தடுக்க முடியாதென்பது நிச்சயம். பிராணிகளைத் துக்கத்திற்குள்ளாக்குவது விதிக்குக் கஷ்டமன்று. விதியின் வலியால் வச்சிரக் கவசமணிந்த பெரிய வீரர்களும் மணலால் கட்டப்பட்ட அணைபோல அழிந்துவிடுகின்றார்கள்" என்றார். இவ்வாறு திட்பமும் உண்மையும் பராக்கிரமமுமுடைய பெரிய புகழ்பெற்ற இராமர் லக்ஷ்மணருக்குக் கூறித் தமது புத்தியின் வலிமையால் தம் மனத்தைத் தேற்றிக் கொண்டார்.

கவந்தன் தனது கைக்குள் அகப்பட்ட இராமலக்ஷ்மணர்களை நோக்கி "ஓ க்ஷத்திரியோத்தமர்களே; நான் பசியாயிருப்பதைப் பார்த்து நீங்கள் இங்கே நிற்கிறீர்களா? அறிவிழந்த நும்மை விதி எனக்கு உணவாகக் கொண்டு வந்துசேர்த்துளது" என்றான். இதைக்கேட்ட லக்ஷ்மணர் மிகவும் வருத்தமடைந்து தமது பேராற்றலைக் காட்டும் பொருட்டு இராமரை நோக்கி, "இக் கொடிய அரக்கன் எங்களிருவரையும் பற்றிக்கொள்வான். அதற்கு முன் நாங்கள் விரைந்து வாளியினால் இவனுடைய பெருங் கைகளிரண்டையும் வெட்டுவோம். இந்தப் பெரிய பயங்கரமான உருவத்தையுடைய ராக்ஷசன் தன் தோள்வலியைக்கொண்டே இவ்வுலகத்தையெல்லாம் வெற்றிகொண்டு நம்மையும் இப்போது கொல்லக் கருதுகின்றான். யாகத்திற்குக் கொண்டுவரப்பட்ட பசுவைப் போலத் தங்களைப் பாதுகாத்துக்கொள்ளக் கூடாதவர்களைக் கொல்வது க்ஷத்திரியர்களுக்கு பெரிய நிந்தையாகும்" என்று அந்தச் சமயத்திற்குத் தக்க வார்த்தைகளைச் சொன்னார். இவர்களிவ்வாறு பேசுவதைக் கேட்ட கவந்தன் கோபங்கொண்டு வாயைத்திறந்து அவர்களை விழுங்கிவிட முயன்றான். உடனே இராமலக்ஷ்மணர்கள் காலத்தையும் இடத்தையும் நோக்கி வெகு சந்தோஷமாகித் தங்களுடைய வாளினால் கவந்தன் தோள்களிலிருந்து அவனுடைய கைகளை வெட்டித் தள்ளினார்கள். வலப்பக்கத்தில் நின்ற இராமர் அவனுடைய வலக்கையை ஒரு கணப்பொழுதினுள் வெட்டினார்; வீரராகிய லக்ஷ்மணரும் அப்படியே அவனுடைய இடக்கையை வெட்டினார். கைகள் வெட்டுண்ட கவந்தன் மேக முழக்கம்போலப் பெருங் கூச்சலிட்டு ஆகாசம் பூமி எண்டிசைகளாகிய எவ்விடத்துங் கேட்கக் கதறிக்கொண்டு பூமியில் விழுந்தான். கைகள் வெட்டுண்டு தனது தேகமெல்லாம் இரத்த வெள்ளம் பெருக நின்ற அரக்கன் அவர்களைப் பார்த்து, "நீங்கள் யார்?" என்று பரிந்து கேட்டான். இவ்வாறு கவந்தன் கேட்க அழகான லக்ஷணங்கள் அமைந்த லக்ஷ்மணர் அவனுக்கு ராகவரைப் பற்றிச் சொல்லலுற்று, "இவர் இக்ஷ்வாகு வம்சத்தில் தோன்றி இராமர் என்று பெயர் பெற்றவர். யான் அவருடைய தம்பி லக்ஷ்மணன். அரசனாக முடிசூட்டப்படப் போகும்போது தாயாரால் சதிசெய்யப்பட்டு அவர் எல்லாவற்றையுந் துறந்து தன் மனைவியோடும் என்னோடும் காட்டிற்கு வந்துவிட்டார். அடர்ந்த காட்டில் வசித்துக்கொண்டிருக்கும்பொழுது தெய்வப் பெண்போன்ற இவருடைய மனைவியை ஒரு அரக்கன் தூக்கிக்கொண்டு போய்விட்டான். அவளைத் தேடிக்கொண்டு நாங்கள் இங்கு வந்தோம். நீ யார்? துடைகள் முரிந்து வாய் மார்பில் அமைக்கப்பட்டு இக் கவந்த உருவத்துடன் நீ ஏன் இந்தக்காட்டில் வசித்துக்கொண்டிருக்கின்றாய்?" என்று கேட்டார். இவ்வாறு லக்ஷ்மணர் நல்ல வார்த்தையால் கேட்க, கவந்தன் சந்தோஷமடைந்து இந்திரன் சொற்களை நினைத்துக்கொண்டு அவர்களைப் பார்த்து, "புருஷோத்தமர்களே, உங்களுடைய வரவு நல்வரவாகுக. என்னுடைய பாக்கியத்தினால் நான் உங்களைக் கண்டேன். என்னுடைய நல்வினையினாலேயே நீங்கள் என் இரண்டு கைகளையும் வெட்டினீர்கள். நான் எவ்வாறு என் அகந்தையால் இந்த விகாரமான ரூபத்தை அடைந்தேனென்பதைச் சொல்லுகிறேன் கேளுங்கள்" என்றான்.

"பெருந் தோள்களையும் பேராற்றலையுமுடைய இராம, இந்திரனையும் சந்திராதித்தியர்களையும்போன்ற சொல்ல முடியாத என் அழகினால் நான் முன்னே மூவுலகங்களிலும் கீர்த்தி பெற்றிருந்தேன். நான் அந்த அழகிய ரூபத்தையொழித்துக் கோரரூபங்கொண்டு எத்திசைகளிலும் காட்டில் வசித்திருந்த ரிஷிகளைப் பயமுறுத்திக்கொண்டு வந்தேன். அப்படிச் செய்துவரும்பொழுது ஒருநாள் நான் இந்தக் கோரரூபத்தைத் தரித்துக் காட்டில் பழம் பறித்துக்கொண்டிருந்த ஸ்தூலசிரசென்றவொரு பெரிய முநிவரைப் பயமுறுத்தினேன். அவர் கோபங்கொண்டு, "மனிதர் எல்லாராலும் வெறுக்கப்படும் இக் கோர ரூபத்தை நீ அடையக்கடவாய்" என்று என்னைச் சபித்தார். நான் அவரை வணங்கி இந்த என் சாப விமோசனத்திற்காகப் பிரார்த்திக்கவும், அவர் "இராமர் உன் கைகளை வெட்டி உன்னை ஒரு பெரிய காட்டில் தகனஞ்செய்யும்போது நீ உன் அழகான உருவத்தை அடையக் கடவாய்" என்றார். ஓ லக்ஷ்மண, நான் தனுவினுடைய குமாரன். போர்க்களத்தில் இந்திரனிட்ட சாபத்தினால் நான் இந்த உருவம் அடைந்தேன். நான் பிரமனைக் குறித்துத் தவம்புரிந்து அவரைச் சந்தோஷப் படுத்தித் தீர்க்காயுசு பெற்றுக்கொண்டேன். அதனால் செருக்கடைந்து தீர்க்காயுசுபெற்ற என்னை இந்திரன் என்ன செய்வான் என்று அவனோடு போர் புரிந்தான். அப்போது அவனால் எறியப்பட்ட சதகோடியாகிய வச்சிராயுதத்தினால் எனது துடைகள் முரிந்து தலை உடலுக்குள் புதைந்தது. அது கண்டு நான் என் உயிரை வாங்கிவிடும்படி கேட்டும் அவன் என்னை யமலோகத்திற் கனுப்பவில்லை; "பிரமதேவர் கொடுத்த வரம் பொய்யாகாது" என்று மாத்திரம் சொன்னான். அதற்கு நான், "உன் வச்சிராயுதத்தினால் அடிபட்டு என் தலையும் துடையும் வாயும் நொருங்கியுளேன்; உணவின்றி நான் எவ்வாறு நெடுநாளைக்கு உயிரோடிருப்பேன்" என்றேன். அதுகேட்டு இந்திரன் என் கைகளை யோசனை நீளமுள்ளவைகளாகச் செய்து கூரிய பற்களையுடைய என் வாயை வயிற்றில் வைத்தான். அன்றுதொட்டு நான் என் நெடிய கைகளை நீட்டிக் காட்டில் வாழும் சிங்கம், புலி, மான், நரிகளைப் பிடித்துப் புசித்துக் கொண்டிருந்தேன். இந்திரன் "இராமலக்ஷ்மணர் உன் கைகளைப் போரில் வெட்டினபோது நீசுவர்க்கம் அடை[illegible]

என்றான். ஐயா ராஜோத்தமனே, என்னுடைய உடலைப் போக்கவரும் இராமர் எனது கைக்குள் நிச்சயமாய் அகப்படுவார் என்ற நம்பிக்கையினால் நான் இந்தக்காட்டில் எதிர்ப்படும் ஒவ்வொருமிருகங்களையும் சந்தோஷத்தோடு பிடித்துக்கொண்டிருந்தேன். அந்த இராமர் நீரே. ஓ ராகவ, உமக்கு நன்மையுண்டாகுக. இராமர் அன்றி வேறெவராலும் என்னைக் கொல்லமுடியாதென்று அம்மாமுனி உண்மையாகச் சொன்னார். உம்மால் தகனம் பண்ணப்பட்டபின் நான் நீர் யாருடன் சிநேகம் செய்யவேண்டும் என்று நல்ல புத்திகள் சொல்வேன்" என்று தநுவின் குமாரன் சொல்ல, மகாத்துமாவாகிய இராமர், லக்ஷ்மணர் கேட்கும்படியாக, அவனை நோக்கி, "நானும் என் தம்பியும் ஜனஸ்தானத்தில் இல்லாதிருந்த சமயம் பார்த்து எனது புகழ்பெற்ற மனைவி சீதையை இராவணன் தூக்கிக்கொண்டு போய்விட்டான். அவன் பெயர் மாத்திரம் தெரியுமே அன்றி அவன் தோற்றம், இடம், வலி முதலியவைகளொன்றும் எனக்குத் தெரியாது. இவ்வாறு துக்கத்தி லாழ்ந்து அநாதைகளாக அலைந்துகொண்டு திரிபவர்களும் பிறருக்கு எப்போதும் நன்மையே புரிபவர்களுமாகிய எங்களுக்கு நீ தயவு செய்யத்தகும். வீர, நாங்கள் யானைகளால் முறிக்கப்பட்டு உலர்ந்திருக்கும் கட்டைகளைக் கொண்டுவந்து பெருங்குழியில் போட்டுத் தீமூட்டி உன்னைத் தகனம் செய்கிறோம். சீதையை எவன் கவர்ந்துசென்றான் என்றும் எவ்விடம் கொண்டு போயினான் என்றும் உனக்குத் தெரிந்தால் அவசியம் எங்களுக்குச் சொல்லு" என்று கேட்டார். அப்போது பேசுவதில் வெகு சமர்த்தனான அரக்கன் அவரை நோக்கி, "எனக்குத் திவ்விய ஞானம் இல்லை. அதனால் சீதை யிருக்குமிடத்தை அறியேன். உங்களால் தகனம் செய்யப்பட்டு என்னுடைய சுயரூபத்தை அடைந்தபின் சீதையைப் பற்றி எல்லாம் சொல்லவல்லவனொருவனை உங்களுக்கு நான் சொல்லுவேன். இந்தத் தேகம் எரிந்துபோம்வரையில் சீதையைத் தூக்கிப்போன மகா வீரியம் பொருந்திய அரக்கனை இன்னான் என்று அறியும் ஞானம் எனக்கில்லை. யான் சாபத்தினால் எனது ஞானத்தை இழந்துவிட்டேன். என் கொடிய செயலால் எனக்கு இந்த விகார ரூபம் உண்டாயிற்று. சூரியன் தனது களைத்த பரிகளுடன் மேற்றிசையில் சென்று மறையுமுன் என்னைக் குழியில் தள்ளிச் சாஸ்திரப் பிரகாரம் தகனம் செய்யும். ஓ இராகவா, உம்மால் தகனம் செய்யப்பட்டதன்பின் அந்த ராக்ஷசனை அறிந்தவனொருவனை நான் உமக்குச் சொல்லுவேன். நற்குணமமைந்த அவனோடு நீர் நட்புச்செய்துகொள்ளும். அவன் உமக்குத் தகுந்த உதவி செய்வான். இந்த மூவுலகங்களிலும் அவனுக்குத் தெரியாத தொன்றில்லை. அவன் முன்னொருகாலத்தில் ஒரு காரணத்தால் மூவுலகங்களையும் சுற்றிவந்துளான்" என்றான்.

இன்னவாறு கூறியது கூறுவதற்கு அஞ்சாக் கவந்தனை இவ்விரு சகோதரர்களும் முறைப்படி கட்டையிலிட்டு எரித்துவிட்டனர். சுட்டாலும் அவன் சொல் சுருங்குவதில்லை. அக்கினியினின்று அழகிய உருவமோடெழுந்து ஆகாயத்தில் நின்றுகொண்டு சுக்கிரீவனது வரலாற்றினை நெடிதுரைக்கப் புக்கனன். மனைவியை இழந்திருந்த இராமன் அவ்வாறே மனைவியை இழந்திருந்த ஒருவனுடன் நட்புச் செய்துகொள்ளலே தக்கதென ஓதினான். ஓதி ரிசிமுகபர்வதத்திற்குச் செல்லும் வழியையுஞ் சாற்றினான். ஆம், இவ்வளவிலும் ஒன்றுஞ் சுவை காணவில்லை என்று ஒருவருங் குறை கூறவேண்டா. சுவையின் பொருட்டுத் தாம் இக்காப்பியத்தைச் செய்தாரென வான்மீக முனிவர் எவ்விடத்தும் யாருக்கும் வாக்களிக்கவில்லை. ஓர் கதையைச் சொல்லவருகின்றார், அவ்வளவே அவர் கடன். எனினும் இதனில் கைநிறையக் கதையேனும் இருக்கின்றது. கவந்தனுக் கருகு வருங்கால் கம்பரது நூலில் அதுவுமில்லை. மற்று, இருந்ததுதான் ஏதோனுமுண்டோ என்பதைப் பின்னர்ப் பார்ப்போம்.

காற்று மழை

Shakespeare—"The Tempest"

[813-வது பக்கத் தொடர்ச்சி]

ஆராய்ச்சி

"காற்றுமழை" ஷேக்ஸ்ப்பியர் எழுதிய நாடகங்களில் கடைசியாமெனக் கருதுவார் ஒரு சாரார். இன்னவாறு கருதுவதற்கு இந்நாடகத்தினுள் சில ஆதாரங்களும் இருக்கின்றன. ப்ராஸ்ப்பிரோவின் வாயைக் கொண்டு ஷேக்ஸ்ப்பியர் சில இடங்களில் தன்னையே தெரிவித்துக்கொண்டனரோ என நினைத்தலுங்கூடும். ப்ராஸ்ப்பிரோ தான் கற்ற இந்திரசாலத்தால் காட்சிகள்பலப்பல கற்பித்துக் காட்டினான்; மனிதர் மனத்தினைத் தன் இச்சையின்படி யியக்கினான். அவ்வாறே ஷேக்ஸ்ப்பியரும் தன் கவிதாசாலத்தால் சிருட்டித்த உலகங்களும் காட்சிகளும் எத்தனையோ பல; ஷேக்ஸ்ப்பியரின் கவிதை செல்லுமிடமெல்லாம் மனிதர் அனைவரும் அன்றுதொட்டு இன்றுகாறும் அதன்வயப்பட்டு இயங்கிவருகின்றனர். கற்றோர் இதயங்களைக் களிக்கச்செய்பவர் நம் கம்பர் என்னின், கேட்டோர் செவிகளை இனிக்கச்செய்பவர் வான்மீகர் என்னின், நினைப்போர்மனத்தினைக் கவர்ந்து கொள்பவர் ஷேக்ஸ்ப்பியர். இத்தகைய ஷேக்ஸ்ப்பியர் தன் கலைத்தொழிலை இந்நாடகத்தோடு முடித்துவிடுகின்ற எண்ணத்தை,

> என்கோலினை உடைத்து மண்ணினில் ஆழப்புதைத்து,
> விழுதுகள் என்றும் அளந்துள்ள ஆழத்திற்கும்அடியில்
> என் புத்தகத்தை அமிழ்த்திவிடுவேன்
>
> —அங்கம் 5, களம் 1, 715-வது பக்கம்.

என்று ப்ராஸ்ப்பிரோவைக் கொண்டு விளம்புகின்றார் எனச் சிந்திப்பதும் பொருத்தமுடையதே.

இந்நாடகம் ஷேக்ஸ்ப்பியர் எழுதிய நாடகங்களில் கடைசியாயினும் அல்லதாயினும் கடைசி வரிசையிற் சேர்ந்ததென்பதில் ஐயமில்லை. சிந்தனைத்திறத்திலும் உலக அநுபவத்திலும் கலையுணர்விலும் முதிர்ந்த ஷேக்ஸ்ப்பியர்தம் மனத்தில் திரண்டு பழுத்த தகைமையின் முடிவாக இரக்கமும் பொறுமையுமே இவ்வுலகவாழ்க்கையின் உயிர்நிலை நாடிகளென்னக் குறித்து இந்நாடகத்தை முடித்திருக்கின்றனர். கொடுமையிழைத்த தன் தம்பி அன்டோனியோவையும் அவனுக்கு உதவிசெய்த மன்னன் அலான்ஸோவையும், அமயம் நேர்ந்தவிடத்தும் ஒறுக்காமல் மன்னித்துவிட்ட இப் ப்ராஸ்ப்பிரோ ஷேக்ஸ்ப்பியரின் பெருந்தகைமையையே தழுவிக்கொண்டவன் ஆகின்றான். தன் தலையிலே கல்லைப்போடவந்த அந் நன்றிகெட்ட விருபி காலிபனையும் பொறுத்ததே ப்ராஸ்ப்பிரோ ஷேக்ஸ்ப்பியரின் முதிர்ந்தமனத்தினின்றுபிறந்தனன் என்பதற்குப் போதிய சான்றாகும்,

ப்ராஸ்ப்பிரோவின் பகைவர் அனைவரும் அவன் கையில் வந்து இப்பொழுது அகப்பட்டுக்கொண்டனர். திட்பமும் ஆற்றலும்வாய்ந்த இவனும் இச்செவ்வியை வீணே கழியவிடாமல் முழுவதும் அதனை உபயோகப்படுத்திக்கொள்கின்றான். எனினும், தண்டிக்க வேண்டிய தருணம் வந்தவுடன், அது செய்யாமல், அவர்கள் இழைத்த கொடுமையை இடித்துரைத்து எடுத்துக்காட்டியபின் அவர்களனைவரையுமன்னித்துவிட்டான். அவர்தம் தீமைகளைப் பொறுத்ததுமன்றி மறந்தும்விட்டனன். பொறையாளனது சீரிய தன்மை அன்னதே.கடவுளின் கருணையே அனையது இது. அக் கருணையங் கடவுளின் சிருஷ்டிகளில் ஒன்றாகிய ஏரியல், (மனிதனல்லாதது, காற்றெனக் கருதப்படுவது, நாமறிந்தபடி மனிததருமத்தைச் சாராதது) இவ்வகை முழுமன்னிப்பை அளிக்கும்படி ப்ராஸ்ப்பிரோவைத் தூண்டுகின்றது. அரசனும் அவனைச் சார்ந்தவர்களும் மனங்கலங்கி வருந்திய பெருந் துயரத்தைக் கூறி அப்பொழுது அதனைப் பார்ப்பானாயின் ப்ராஸ்ப்பிரோவின் மனம் இளகும் எனச் சாற்றியது இவ்வேரியல்.

ப்ராஸ்ப்பிரோ:—அவ்வாறு எண்ணுகின்றாயோ நீ, ஆவியே?

ஏரியல்:—யான் மானிடனாயின், ஐய, என் மனம் இளகும்.

ப்ராஸ்ப்பிரோ:—ஆயின், எனது இளகத்தான் வேண்டும். காற்றேயாகிய உன்னை அவர் துன்பத்தின் உணர்ச்சி தீண்ட, அன்னவர் இனத்தில் ஒருவனாகி அவரே போல் துன்பத்தின் கூர்மையை அனுபவிப்பதற்கியன்ற நான் நின்னிலும் இயற்கையுற இரங்கவேண்டாவோ.........பழிதீர்த்தலி னல்லாது அறத்தினிற்றானே அரிய செய்கை அமைந்திருக்கின்றது.

—அங்கம் 5. களம் 1. பக்கம் 714.

இவ்வண்ணம், பொறுமையின் நன்மையைக் கற்பித்தலே இந்நாடகத்தின் நோக்கம்போல் தோன்றுகின்றது. இக் "காற்று மழை"யுடன் ஷேக்ஸ்ப்பியர் நாடகங்களின் இறுதி வரிசையைச் சேர்ந்த, "ஸிம்பலின்" 'வின்டர்ஸ டேல்' என்னும் மற்ற இருநாடகங்களிலும் இப்பொறுமையின் சிறப்பைக் காட்டுகின்ற குறிப்பைக் காணலாம். இந் நாடகங்களில் (சிறப்பாக இக் காற்றுமழையில்) ஷேக்ஸ்ப்பியர், நாடகத் தொழிலினின்றும் நகர வாழ்க்கையினின்றும் விடைபெற்றுக்கொள்கின்றாரெனின், இறுதியாக நமக்குப் பொறுமையின் உயர்வை உணர்த்திச் செல்லவேண்டுமென்னும் ஊக்கமே உடையவராகக் காணப்படுகின்றனர். எல்லாத் துயரத்தையும் எடுத்தெறிவது இப்பொறுமை. நமக்குத் தீமை செய்தோரை மன்னிக்கும் மனத்தினால் நாம் மறு உயிர் பெறுகின்றோம். பகைவர் இழைத்த தீமையால் நாம் பட்டிருந்த துன்பமானது, அவர்தமை ஒறுத்தலால்ஒருபோதுந் தீர்வதில்லை; ஒறுக்கக்கூடிய வலிமை பெற்றும் அது செய்யாமல் பொறுத்த அன்றைக்கே அத் துன்பந் தீர்வதன்றியும் புதியதோர் இன்பத்தைப் பெற்றவர்களும் ஆகின்றோம். நுண்ணிய அறிவிலும், உண்மை உணர்விலும், கலையின் திறமையிலும், இங்கிலாந்தில் தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இருந்ததில்லை என்ன ஒரு தனி உயர்ந்துநின்ற ஷேக்ஸ்ப்பியர், தன் பிரிவுப் பரிசிலாக,

> ஒறுத்தார்க் கொருநாளை யின்பம் பொறுத்தார்க்குப்
> பொன்றுந் துணையும் புகழ்.

என்னும் பெருமனச் செம்மையை அருளிச் செல்ல நினைத்தது அத்துணையும் நன்று. திருவள்ளுவரோடு அவர்கொண்ட ஒற்றுமையுறவு இதன்மட்டுமே நின்றுவிடவில்லை. நாம் மன்னிக்கும்போது அது அரைகுறையா யமைதலாகாது; இழைத்த தீமை முழுவதும் அம்மன்னிப்பினுள் முழுகிவிடவேண்டும் என்பதையும் வற்புறுத்துகின்றார். அத்தீமையின் நினைவு, பொறுத்தவன் நாவினின்றும் இதயத்தினின்றும் அறவே அழியவேண்டும். கசக்கிப் பிழிவதன்று கருணை.—"கழிந்துவிட்டதோர் பாரத்தால் நம் நினைவினைச் சுமத்த வேண்டா"—இது ப்ராஸ்ப்பிரோவின் குரல். எனினும் இக்குரலிற்குப்பின் இருப்பது ஷேக்ஸ்ப்பியரின் கலைகனிந்த இதயம். இவ்விதம்,

> பொறுத்த லிறப்பினை யென்று மதனை
> மறத்த லதனினு நன்று.

என்ற திருவள்ளுவர்தம் மெய்யுணர்வுடைய இதயத்துடன் இணங்கி, இன்னிசை யெழ ஷேக்ஸ்ப்பியரின் இதயமுந் துடிக்கின்றது.

தன் இதயத்தையே ஷேக்ஸ்ப்பியர் பாராஸ்ப்பிரோவிற்குத் தந்திருந்தது மன்றி, அவ்விதயம் அவ்வாறு கனிந்ததற்குக் காரணம் அவன் கற்றிருந்த கல்வியே எனக் காட்டுவதும் சாலச் சிறப்புடைத்து.தன் உயிரினும் அதிகமாகப் புத்தகங்களைக் கருதினவன் ப்ராஸ்ப்பிரோ; தன் அரசினையும் மறந்தான்—

> உற்றுக்கேள், இவ்வண்ணம் யான் உலகப் பயன்களைப்புறக்கணித்துத் தனியே விலகியிருந்து என் மனத்தின்நலனிற்கே என்னை அர்ப்பணம் செய்துகொண்டவனாயினேன். உலகத்தினின்று ஒதுங்கவைப்பினும் பொதுமக்களின்நன்மதிப்பெல்லாம்விட மிகவுயர்ந்தது அது.
>
> —அங்கம் 1, களம் 2, 90-வது பக்கம்.

கல்வியில் ஊன்றிய இச் சிந்தனையுடன் தன்னொரு அருமைப் புதல்வி மிராண்டாவின்பால் வைத்திருந்த நேயமும் ப்ராஸ்ப்பிரோவின் மனத்தினைப் பண்படுத்த உதவியிருக்கும் என்பதில் ஐயமில்லை. மிராண்டாமிக நல்லள்.தந்தையும் தாயும் தானேயாகி ப்ராஸ்ப்பிரோ அவளை இனிது காக்கின்றான்.அவளது பெண்மைக்கு ஏதேனும் பழுதுநேருமோ எனப்பரிந்துதான்பயிலும் மந்திரஜாலமொன்றும் அவளைக் கலவாமல் விலக்கி வைக்கின்றனன். தன் தந்தைக்கு மந்திரசக்தி யுண்டென்பது அவளுக்குத் தெரியும்; எனினும் அவ்வறிவினால் அவள் ஆன்மா ஒருவகையிலும் தூண்டப்பெறுவதில்லை. அவளது இயற்கைச் செம்மை இழுக்கடையாமல் மிக்க கருத்துடன் காக்கப்பெறுகின்றது. அவள் முன்னிலையில் ஏரியலை ஒருபோதும் அழைக்க மாட்டான். ஏரியல் ஒன்று இருந்ததென்பதுகூட அவள் அறியாள். காலிபனையும் அவள் விபரீதமாகக் கொள்ளாமல், காணக் கண் கரிக்கும் ஓர் இழிதகை மனிதனே எனக் கருதினாள். தன் தந்தை அன்றி மனித இனத்தில் அவள் கண்டிருந்தது அக்காலிபன் ஒருவனையே யாதலின் பர்டினண்டை எதிர்ப்பட்டவுடன், "இதுவோர் ஆவியேயோ" எனக் கூவியது இயற்கையாகின்றது.

காற்றுமழைக் கிடையே மிராண்டாவை நாம் முதலில் கடற்கரையிற் சந்திக்கின்றோம். மரக்கலம் உடைவதைக் கண்டனள். அவள் மனம் பதைத்து இரங்குகின்றது:—

ஐயகோ, துன்புறயான் கண்டவர்களோடு நானுந் துன்புற்றேன்! ஓர் அண்ணல்நாவாய்-பெருமைசான்றபிராணிகள் சில அதனுள் இருத்தல் வேண்டும் - எல்லாந் துண்டுதுண்டாயுடைந்துபோயிற்றே. ஐயோ, அந்தக் கதறல் வந்தென் இதயத்தை இடித்தது! பாவம் அவ்வேழைகள் அழிந்தனர். மற்று நான்தானோர் ஆற்றலுடைத் தெய்வமா யிருந்தேனாயின்! தான் சுமந்த சீவன்கள் உள்ளிருக்க நல்ல இக் கப்பலை இன்னணம் விழுங்கா முன்னம், இவ் வாழியை நான் பூமிக்குள்ளே ஆழ்த்தியிருப்பேன்.

—அங்கம் 1. களம் 2. பக்கம் 51.

பெண்பாலார் பேதைமையின் அழகியதோர் பெருமித வாசகம் இது. தரையையும் கடலையும் உலகம் முழுவதையும், தான் சாகக்கண்ட ஒருசிலரைக் காக்கும்பொருட்டுக் கவிழ்க்கநினைக்கும் ஊக்கமுடைய மிராண்டா இவள்.

இவ்வகை இரக்கத்தின் விரைவும், தன்னை மறந்த தன்மையின் மென்மையும், மிராண்டாவிற்குக் குழவிப்பருவ வனப்பினைக் கொடுக்கின்றன. அவள் ஆயுளில் இதுகாறும் தனது அன்பத்தனையும் தந்தையின்பாலே செலுத்தியிருக்கின்றாள். தான் நாடிழந்த கதையை அவளுக்கு அவன் சொன்னபோது, தான் எத்தனைத்துன்பம் தன் தந்தைக்கு அந்நாள் தந்திருக்க வேண்டும் என்பதையே கருதிப் பரிகின்றாள்:—

இப்பொழுது என் நினைவினின்று நீங்கிவிட்டதாயினும், அக்காலம் நானுனக்கு விளைத்த துன்பங்களை நினைக்க என் இதயம் இரத்தம் வடிக்கின்றதே... அட, அப்பொழுது நானுனக்கு எத்துணை இடுக்கணா யிருந்தேனோ.

—அங்கம் 1, களம் 2, பக்கம் 75,132,

இப்படித் தன்னை நினையாமல் பிறர் பொருட்டுப் பரிவுகூர விரைகின்ற குணம் செய்ந்நன்றியைச் சாலப் போற்றுதல் இயற்கை. தன் தந்தையின்பால் கன்ஸாலோ காட்டிய தயையைக் கேட்டவுடன் நன்றிமிகப் பெருகுகின்ற மனத்தவளாகி,

என்றேனும் நான் அம்மனிதனைப் பார்க்கத் தான் நனி நேருமோ

—அங்கம் 1, களம் 2, பக்கம் 170.

என விழைந்தது இவளது உயரிய இயற்கையைக் குறிக்கும். இனி, பர்டினண்டின் வருகையோடு இன்னவள் தன்மையில் ஓர் வேறுபாடு ஏற்படுகின்றது.

களத்தினில் பர்டினண்ட் கால் வைக்கின்றான். மிராண்டா அவனைக் காண்கின்றாள். அந்தக் கணத்திலேயே காதலானது அவளை ஆட்சிகொள்ளத் தலைப்பட்டுவிடுகின்றது. வாய்திறந்து அவள் தன் காதலை ஒன்றுஞ் சொல்லா முன்னரே, வஞ்சனையின்றி அது வெளிப்படும் நயத்தினால், அவள் வாழ்க்கை முழுவதும் இப்பொழுது காதலே நிறைந்திருக்கும் நீர்மையைத் தெரிந்துகொள்ளல் அருமையன்று. பர்டினண்டைத் தன்தந்தை கடிந்துபேசிக் கொடுமைகள் செய்தபோது,

இத்தகையவோர் கோயிலில் தீயதொன்றும் வசித்தற்கியலாது; தீயவை என்பவைகளுக்கு இவ்வளவு அழகிய வீடொன்று இருக்குமாயின் நல்லனவும் அதனுடன் வசிக்க முயலும்.

—அங்கம் 1, களம் 2, பக்கம் 395.

என இயம்பித் தன் காதலனுக்குத் தன்னையே பணையமாக வைத்து விளம்புவாள். இவ்வாறு தன்னை அசைத்த காதலின் வேகத்தால், தன் தந்தையின் கருத்திற்கும் மாறாகப் பேசத் துணிந்தனள். மக்கள் கடமையினும் மேலான வோர் ஊக்கம் இப்பொழுது அவள் உள்ளத்தைக் குலுக்குகின்றது. இதனால், தந்தையின் சொல் என்ற கட்டுப்பாடும் சிறிது கலையக் காண்கின்றோம். எனினும், ப்ராஸ்ப்பீரோவுடன் மாறுபட்டுப் பேசிய இந்தச்சொற்கள், விரைவினால் மென்மையால் வினயத்தால்திகழ்கின்றன ஆதலின், தான் ஓர் காதலியான புதுமையினிடையே, புத்திரியின் அருமையை மிராண்டா சிறிதேனும் இழக்காமல் காத்துக்கொண்டனள். தன் தந்தையின் கடுமையைப் பொறுக்குமாறு இவள் பர்டினண்டைத் தேற்றியபோதும்—

தன் சொற்களால் தோன்றுவதனினும், ஐய, நற்குணத்தவர் என் தந்தை; இப்பொழுது அவரிடமிருந்து வருமிது இதுகாறும் இருந்திரா அதிசயமா யிருக்கின்றது.

—அங்கம் 1. களம் 2. பக்கம் 408.

எனத் தன் தந்தையைப் பற்றிப் பர்டினண்ட் பழுது நினைக்காவண்ணமே எடுத்துக் காட்டிய அருமையினள், இம் மெல்லியற் செல்வி மிராண்டா.

மிராண்டா இதுகாறும் தன் மனநிலையை ஆராய்ந்து பார்த்துக்கொண்டவள் அல்லள். எனினும், காதலின் முதிர்ச்சியோடு இச் சுய ஆராய்ச்சியும் தோன்றத் தலைப்படுகின்றது. கட்டை சுமக்கும் அடிமையாய் வருந்திய பர்டினண்டை ப்ராஸ்ப்பீரோவின் குகைக்கெதிரே தலைப்பட்டுக் காதல்மிகு மொழிகளால் இம்மடந்தை மெல்லென இனிது குலாவியிருந்தபோது, முதல்முதல் தன் இதயத்தினுள்ளே கண்ணைச்செலுத்திச் சோதித்துத் தன் தகுதியின் தன்மையைத் தெளிந்துகொள்கின்றனள். தன் காதலைத் தெரிவித்தபின் கண்ணீர் பெருக நின்றாளை நோக்கிப் பர்டினண்ட், "எற்றுக்கு அழுகின்றாய் நீ" என வினவ இந்நங்கை—

நான் நல்க விழைவதை நீட்டவேனும், வேண்டி வேண்டி யான் மாய்வதை எற்கவேனுந் துணியாதஎன் தகுதியின்மையின்பொருட்டாக

—அங்கம் 3. களம் 1. பக்கம் 572.

எனச் சாற்றினாள். இவ்வாறு தன்னைச் சோதித்துக் குறைவுகண்ட இக்காரிகைகாதலால் நிறையுமளவிலே, அக்குறைவு தீருமோர் உபாயம், காதற் பெருங்கடல் புரண்ட அவள் மனத்தினின்று திங்களெனத் தண்ணொளி திகழ உதிக்கின்றது. முற்றிலும் கொடுத்துவிடுவதாலன்றி நிறைவுறு நெறி வேறில்லை என்னும் உண்மையைப் பிறர் ஓதுவாரெனினும் அதனில் ஊக்கம்வைத் துழைப்பன சீரிய காதலர் இதயங்களே. தன்னையே துறக்கத் தாவுகின்றது காதல்மிகு மிராண்டாவின் இதயம். கபடமற்ற திப்பியத் தூய்மையே இனி அவளைத் தூண்டுகின்றது. ஆதலின்,

என்னை நீ மணப்பாயாயின் நான் உன் மனைவி; இல்லையேல் நின் கன்னியாச் சாவேன். உன்றன் துணைவியாக நீ மறுக்கலாம், மற்று நீ இசைந்தாலும் இசையாவிடினும் உன் வேலைக்காரியா யிருப்பேன்

—அங்கம் 3. களம் 1, பக்கம் 573.

எனத் தன் தனி இருக்கையைப் பர்டினண்டின் இருக்கையோடு கலந்து அழித்துக்கொள்கின்ற செவ்வியள் ஆகின்றாள். இதுவே காதலர் இயற்கை.

இதுவே இயற்கையாயினும், ப்ராஸ்ப்பீரோ இதனை உணராமல், முதலில் பர்டினண்டிற்கும் மிராண்டாவிற்கும் காட்சி நேர்ந்தபோது அவர் தம்முள் ஆடிய கண்களவினை, ஏரியலின் சூழ்ச்சியால் விளைந்ததொன்றென மதித்து,

ஆவியே, அழகிய ஆவியே, இதற்காக இரண்டு தினங்களுக்குள் உன்னை விடுதலைசெய்வேன் நான்

—அங்கம் 1, களம் 2, பக்கம் 375.

என ஏரியலைப் பாராட்டி விடுதலைப் பரிசும் அளிக்கின்றான். வயது முதிர்ந்தவோர் தந்தைபாராட்டும் பிழை இது. ஏரியலின் உதவி இதற்குச் சிறிதேனும் வேண்டா. தனக்கே உரியவோர் தனி மந்திரவித்தை காதலுக்கு உளது. இத்துணை ஆற்றலுடைய மந்திரம் ஒன்றும் ப்ராஸ்ப்பீரோவின் புத்தகத்தில் காணமாட்டாது. இவ்விரு காதலர்களும் தமக்கு வேண்டிய மந்திரத்தைத் தாமே செய்துகொண்டு ப்ராஸ்ப்பீரோவையும் வியக்கவைத்தனர். இன்புறத் தழுவிக்கொண்ட அவர்தம் ஆன்மாக்கள் ப்ராஸ்ப்பீரோவின் இந்திரசாலத்தைப் பின்னே நெடிதுவிட்டு முன் சென்றன. ஏரியலின் வாழ்க்கை கூட, நுண்ணிய ஆவி அதுவாயினும், இக்காதலர்தம் மென்மையினளவு நுண்மை வாய்ந்ததன்று. காதலர் தாம் எத்தனையோ பலர் இந்த ஷேக்ஸ்ப்பியர் நாடகங்களிலும் வேறு காவியங்களிலும் நயமொழிகள் நனிபயின்று தம்முள் உரையாடியிருக்கின்றனர். மூன்றாவது அங்கத்தில் இவ்விருவருக்கிடையே நிகழ்ந்த காதன்மொழிகளினழகு பிறிதெங்குங் காணலரிது. தன் தந்தை தவிர வேறோர் புருடனைக் கண்டறியா மிராண்டாவின் கரவிலாக் காதல், மாதர் பலருடன் பயின்று அவர்பால் ஓரளவு ஒவ்வொருபோது ஆசையுங் கூர்ந்திருக்கின்ற பர்டினண்டின் காதலினின்று முதலில் சிறிது வேறுபட்டுத் தோன்றுகின்றது. எனினும், மிராண்டாவை எட்டியவுடன், மாதர்பால் அவன் வைத்திருந்த மதிப்பும் காதலின் மெய்ம்மையும் உயர்ந்து மிராண்டாவின் காதலுக்கு இணையென நிமிர்கின்றனன். பாற்கடலினின்று பிறந்தவுடன் எதிர்நின்ற நெடுமாலை நோக்கிய திருமகளென நிற்கின்றாள் மிராண்டா; பர்டினண்டும் அவள்பொருட்டுத் திப்பிய காதலின் ஒளிதிகழ மிளிர்கின்றவனாயினன். வண்டெனப் பர்டினண்ட் முன் மாதரார் வதன மலர்களைக் காணுங்கால் களித்திருந்தவன், இப்பொழுது உயர்குலத்துதித்த நல்லாள் ஒருத்தியின் காதலின் செம்மையால் கதுவப் பெறுதலும், "என்னுடைய ஆன்மாவே பேசக்கேள்" என்று விளம்பவல்லவனாயின். அவ்வான்மாவின் வாயினை இம்மிராண்டாவின் காதல் திறக்கும்வரையில் இன்னதற்குரிய செவ்வியை அவன் எய்தவில்லை. மாதரார் பலர் தன்னை வியந்துளர் என்னப் பெருமிதம் பேசிய பிள்ளைத்தனம் அவனை இப்பொழுது விட்டு நீங்குகின்றது. இதுவரையில் அவன் காதலன் ஆனதில்லை. மிராண்டாவைச் சந்தித்துவிட்டானகையால் இனியே ஆகின்றனன். காதலின் மேன்மையை ஷேக்ஸ்ப்பியர் கட்டுரைத்த வண்ணமும் நுண்மையும் எண்ண எண்ண ஏற்றந்தரும்.

பழமுதிர்சோலை

கற்பகக் கனி

சிருங்கிபேர வேடன்றன் கங்கையின் ஆழமிட்ட நெடுமை முழுவதும் இராமனைத் தொழுதுநிற்க, எம்மையாளுடைய அவ் வள்ளல், "யான் உன் தொழில் உரிமையின் உள்ளேன்" என்று வேட்டுவக் குரிசில் குகனுக்கு எதிர்த் தொழும்பு ஏற்றுக்கொண்ட பெருமையை உரைத்த கம்பர்தம் பாசுரத்தின் முதலொலியை,

தொழுதகை யமைதியி னமர்ந்தோயு நீயே
யவரவ ரேவ லாளனு நீயே
யவரவர் செய்பொருட் கரணமு நீயே.

[நின் அன்பர் உன்னைத் தொழுகின்ற கையினது தாழ்ச்சிக்கண் அகப்பட்டோயும் நீயே. அவரவர் ஏவல் செய்வானும் நீயே. அவரவர் செய்த பொருள்களுக்குக் காவலும் நீயே.]

எனப் பரிபாடலில் திருமாலைப் பாடிய கடுவனிளவெயினனார் தீங்குரலகவயின் கேட்டுமகிழ்வீர், பண்புமிச் செந்தமிழ்ப் பெருந்தகை,

கொடுமையுஞ்செம்மையும் வெம்மையுந் தண்மையும்
உள்வழி யுடையை யில்வழி யிலையே
போற்றுநருயிரினும் போற்றாந ருயிரினு
மாற்றே மாற்ற லிலையே நினக்கு
மாற்றோ ருமிலர் கேளிரு மிலரெனும்
வேற்றுமை யின்றது போற்றுநர்ப் பெறினே
மனக்கோ ளினக்கென வடிவுவே றிலையே

[கொடுமை உடையவர்க்கு நீ வெய்யனும் செம்மை உடையவர்க்கு நீ தண்ணியனும் ஆகத் தோன்றுகின்றனையல்லது அவைதாம் அவர்களிடத்தில் இல்லையாயின் இவைகளும் உன்னிடத்தில் இருத்தல் இல்லை. உனக்கு வேண்டாதாரை நீ மாற்றுவதும் இல்லை, வேண்டினவர்களைக் காத்தலும் இல்லை - ஏனெனில், உனக்கு மாற்றோர் என்பவரும் இல்லை, கேளிர் என்பவரும் இல்லை. உணருங்கால் உனக்கு இருதிறத்தார்மாட்டும் யாதும் வேற்றுமை இல்லை என்பது தெரியவரும். அன்பர் மனத்திற் கொண்டனவன்றி நினக்கென வேறு வடிவில்லை]

என அளவிறந்த அறிவினால் "வேண்டுதல்வேண்டாமை இல்லான்றன்" ஒருதனி நிலையை உய்த்துரைத்த பெருமையை இனிது துய்த்து இதயங்கள் பெருகுமாறு கடிதுவம்மின்!

கடுவனிளவெயினனார் இவர்பாட்டிதனைக் கேட்டபின், நல்லோரைத் தமரென்று திருமால் அளிக்கின்றானென்றும், தீயோரைப் பிறரென்று காய்கின்றானென்றும் இனிக் கழறன்மின். உவத்தலுங் காய்தலுமில்லாதான் அவன். தீயோர் அவனைக் காய்வானாய்க் காண்கின்றனர், நல்லோர் அவனை மெய்ந்நெறி நன்மயனாய்க் காண்கின்றனர். அவன்செம்மை இன்னவாறு காண்போர் செம்மை; அவன் வெம்மை காண்போர்தம் வெம்மையே. அவனைப் போற்றுங்கால் நும்முடைய செம்மையே எழுந்து நிமிர்கின்றது, அவனைப் பழிக்குங்கால் நும்முடைய பழியே பெருகி வளர்கின்றது என்பதை அறிந்து உங்களை அளந்துகொள்ளுங்கள். பரமனைப் பழித்து உங்கள் பழிகளையே வளர்த்துக் கொள்ளும் செவிலியர்கள் ஆகாதீர். தமிழ்நறுங் கற்பகக் காவினின்று இன்றோர் நற்கனி கொய்துதவினேன், நண்பர்காள், நுகர்மின்.

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட்ஸ் நஞ்சன்கூடு "சத்வைத்யசாலை" மருந்துகள்
"ஆல்மண்டைன்" (டானிக்). "பாலக்ஸ்" பேதிமாத்திரை. "ஸ்ப்ளிவரால்" (குழந்தை கட்டிக்கு)
சுமார் 300 போலிகள் ஏமாற்றும்.
ம.ட.ச்யாவனப்ராசா ம.ட.பிருங்காமலக.தைலம் சோரோஜனோ மாத்திரை
"நஞ்சன்கூடு பல்பொடி"
சாதாரணம-பாக்கெட் (ரிஜிஸ்தர் செய்தது) I.D.ட.ஏ.மெடிசேடட்-டப்பி
தயவுசெய்து கவனித்து வாங்கவும்.
ம.ட.ச்யாவனப்ராச சிறந்த டானிக் சத்வைத்யசாலை - நஞ்சன்கூடு
மூலிகைசோகதுநிற்றுமணக்கு என்னை காஸ்ட்ராலகஸ்
ஜவரேக்
[பஸ்மங்கள் வைத்தியர்களுக்கு மட்டும்.] [அட்வான்ஸுடன் ஆர்டர் செய்யவும்.]

KALANILAYAM
REG. NO. M. 2324.

வர்த்தமானம்

செட்டிநாட்டுக்

கலா நிலயக் கல்விக் கழகம்.

இக் கழகத்தின் அடுத்த வகுப்பு கானாடு காத்தானில் மார்ச்சு மாதம் 3, 4-ம் தேதிகளிற் கூடும். (சனிக்கிழமை, ஞாயிற்றுக் கிழமை.)

அவ்விரு தினங்களிலும் மாலை 6 மணிக்குக் காரைக்குடியில், S. M. S. ஹைஸ்கூல் கட்டிடத்தில் ஸ்ரீமான் T. N. சேஷாசல ஐயர், B.A., B.L., கம்பராமாயணக் கட்டுரைகள் நிகழ்த்துவார்.

இந்தூர் சமஸ்தான முன்னேற்றம்:—இந்தூர் சமஸ்தானத்தார், தங்கள் சமஸ்தானப் பிரஜைகளின் பொருளாதார நிலையை முன்னேற்றுவதற்காகச் சென்ற ஆண்டு ஒரு புதிய சட்டத்தைப் பிறப்பித்திருக்கின்றனராம். அச்சட்டத்தின்படி, சமஸ்தானப் பிரஜைகள், அவர்களது அந்தஸ்து வருமானம் குடும்பநிலை ஆயவைகளுக்கு ஏற்றபடி, கலியாண முதலிய சுபகாரியங்களிலும், சாவு முதலிய அசுப காரியங்களிலும், இவ்வளவு பேருக்குத்தான் அன்னமிடலாம், இவ்வளவு தான் செலவிடலாம் என்று நிர்ணயிக்கப் பெற்றுளதாம். 1933-ம் வருஷம் அக்டோபர் மாதம் இரண்டாம் வாரம், ஒரு பிரமாணர் சவக்கிருத்திய காரியத்தில் அவர் நிலைக்கும், வருமானத்திற்கும் எவ்வளவு செலவு செய்யலாமோ அவ்வளவு கடந்து செலவழித்துப் பிராமணர்களுக்கும் ஏழைகளுக்கும் அன்னமிட்ட குற்றத்திற்காக, சமஸ்தான நீதிஸ்தல அதிகாரி பத்து ரூபாய் அபராதம் விதித்தாராம்.

* * *

கண்ணாடி வீடு:—அமெரிக்காவில் அறுபது அடுக்கு எண்பது அடுக்குள்ள மாளிகைகள் இருக்கின்றன. கண்ணாடி வீடுகளும் கட்டி வருகிறார்கள். இப்பொழுது அமெரிக்காவில் சினிமாப் பெண் ஒருத்தி தான் வசிக்கும் மாளிகை முழுமையையும் மேஜை, பீரோ, கட்டில் முதலிய எல்லாச் சாமான்களையும் கண்ணாடியாலேயே செய்து முடித்திருக்கின்றாள். கண்ணாடியால் செய்யப்பட்ட ஒருவகைப் பாயையே தரையில் விரிக்கவும் உபயோகிக்கின்றாள். கண்ணாடியில் படுத்துறங்குவதால் உற்சாகமாயிருக்கிறதாம். வெய்யில் காலத்தில் குளிர்ச்சியும், மாரிக் காலத்தில் உஷ்ணமும் அளிக்கிறதாம். கண்ணாடி வியாபாரிகள் ஒருவகை லோகத்தைக் கலந்து கண்ணாடி செய்கிறார்கள். இதனால் கண்ணாடி மங்கலாகவும் உறுதியாகவும் இருக்கின்றது. மற்றும் இம்மாதிரிக் கண்ணாடி வீட்டிற்குள் இருப்போர் வெளியில் நடப்பதைப் பார்க்க இயலும். ஆனால் வெளியில் இருப்போர் உள்ளே இருப்பவைகளையும் நடப்பவைகளையும் பார்க்க முடியாது.

* * *

சிற்பக் கலை அறிஞர்;—சிற்பக்கலையில் மேம்பாடு அடைந்த திரு. சி. பி. காமத் என்பவருக்கு ராயல் கலைக் கழகத்தார் சமீபத்தில் பொற் பதக்கம் அளித்தனர். இவர் கோவா என்னும் இடத்தில் பிறந்தவர். 1928 ம் வருஷத்திலிருந்து இவர் பம்பாயிலுள்ள சிற்பக் கலைக் கழகத்தில் பழகி வந்தவர். இவருடைய திறமையை வியந்த டைரெக்டர் இவருக்கு மேயோ பொற்பதக்கமளித்ததுடன் ராயல் கலைக் கழகத்தின் பார்வைக்கு இவர் செய்த உருவசிலைகளை அனுப்பினார். ராயல் கலைக் கழகத்தாரும் இவருடைய போற்றலைக் கண்டு களித்துத் தமது கழகத்தில் பயிற்சி பெறுமாறு அனுமதித்தனர். 1931 ம் வருஷமுடிவில் திரு. காமத்திற்கு வெள்ளிப் பதக்கமும் 30 பவுனும் அளிக்கப்பட்டன. மற்றொரு சமயம் வெண்கலப் பதக்கமும் 10 பவுனும் அளிக்கப்பட்டன. தற்சமயம் இவருக்கு வருடம் 80 பவுன் வீதம் உபகாரச் சம்பளம் கொடுக்கப்படுகிறது.

NATIONAL
INSURANCE COMPANY, LIMITED.
Head Office:
NATIONAL INSURANCE BUILDING,
7, Council House Street, Calcutta.

1933 Results.

New Business Completed exceeds ... ... Rs. 1,67,00,000

The Company with a steady progress all round.
All forms of life assurance policies issued at low safe rates of premium.

Specialities.

Female Lives
Joint Lives
Permanent Protection Policies
Triple Benefit Policies.
Marriage & Future Provision Policies.

For agencies please apply to:—
T. ANANTACHARI, Branch Secretary, 113, Armenian Street, Madras. OR R. G. DAS & Co., *Managers.*

Consult
NATIONAL FIRE
AND
GENERAL INSURANCE COMPANY Ltd.,
Head Office:—
NATIONAL INSURANCE BUILDING,
7, Council House Street, Calcutta
for Fire, Motor & Accident policies.

A sound Company.

Please apply for particulars to:—
T. ANANTACHARI, Branch Secretary, 113, Armenian Street, Madras. OR R. G. DAS & Co., *Managers.*

கோடையின் கொடுமை
நீங்கள் ஆயுர்வேத முறைப்படி செய்யப்பட்ட
எங்களுடைய
மணி தைலத்தை
உபயோகித்தீர்களா?
மூளையைக் குளிரச்செய்து கை கால் கண்களின்
எரிச்சலைச் சமனஞ்செய்து தலை மயிரை நீண்டு
வளரும்படி செய்யும். உடனே வாங்கி
உபயோகியுங்கள்.
5 தலம் தைலங் கொண்ட புட்டி 1-க்கு ரூ. 1.
இனும்! கேட்லாக். இனும்!!
ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, மதராஸ்.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)